# சைவப்பெரியார்

# சு. சிவபாதசுந்தரம்

வெளியீடு:

சவப்பெரியார்

நூற்றாண்டு

விழாச்சபை

உ

# சைவப்பெரியார்
# சு. சிவபாதசுந்தரம்

கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை
677/9, [illegible] வீதி
யாழ்ப்பாணம்

புலவர் நா. சிவபாதசுந்தரனார்

வெளியீடு:
சைவப்பெரியார் நூற்றாண்டு விழாச்சபை

முதற் பதிப்பு: யூன் 1978

SAIVAPERIAR S. SIVAPATHASUNDARAM

First Edition: June 1978

*Author:*
**Pulavar N. Sivapathasundaranar**
Tholpuram
Chulipuram

*Publishers:*
**Saiva Periyar Centenary Society**
Velliampati
Alaveddy

*Printers:*
Chettiar Press
432, K. K. S. Road
Jaffna
Phone 7853

உ



சு. சிவபாதசுந்தரம்

## முகவுரை

புலோலி, சைவப்பெரியார் சிவத்திரு சு. சிவபாதசுந்தரம் அவர்களின் வாழ்வியல் இலைமறை காய்போல் இதுகாறும் இருந்து வந்துள்ளது. அன்புமிகுந்த அவரின் மாணவர்கள் அபிமானிகள் ஆண்டுதோறும் விக்ரோறியாக் கல்லூரியில் பெரியார் மறைந்த தினத்தைக் கொண்டாடுவர்.

இவர்கள் பெரியாரின் நூற்ருண்டைக் கணித்துப் பெருவிழாக் கொள்ளச் சைவப்பெரியாரின் உத்தம சீடர்களில் ஒருவரான அளவையூர் திரு. ச. சிதம்பரப் பிள்ளை, B. A., B. Sc. அவர்களின் தலைமையில் திரண்டு நூற்ருண்டு விழாச் சபை அமைத்தனர். அதில் கருத்து விளக்கக் குழுவில் என்னைச் சேர்த்துப் பெரியாரின்

வாழ்வியல் வரலாற்றை இச்சபையின் சார்பில் எழுதும்படி பணித்தனர்.

அப்பணிப்பை மேற்கொண்டு சைவப் பெரியாரின் உற்ருர் உறவினர்கள், பழைய மாணவர்கள் என்பவர்களைக் கண்டும் அவர் எழுதிய நூல்களைக் கொண்டும் என்னுல் இயன்ற அளவுக்கு இதனை எழுதியுள்ளேன். ஆன்ருேர் குறைபிருப்பின் பொறுப்பாராக.

தமிழ்நிலை,
தொல்புரம், சுழிபுரம்.
*1978-06-23*

இங்ஙனம்,
நா. சிவபாதசுந்தரனுர்

சைவப்பெரியார்

# சிவத்திரு. சு. சிவபாதசுந்தரம் அவர்கள்

வரலாற்றுச் சுருக்கம்

## குலப்பெருமை

ஈழவள நாட்டிலே யாழ்ப்பாணம் என்னும் நகரிலே புலோலி என்ற சிற்றூரின் கீழ்பால் வல்லிபுரநாதர் என்ற மதிப்பு வாய்ந்த வர்த்தகர் ஒருவர் இருந்தார்: இவர் செல்வத்தோடு சிவசீலமும் நிறைந்தவர். இவர் சின்னுச்சிப் பிள்ளை என்ற பெண்மணியை மணந்தவர்; எட்டுக் குழந்தைகளைப் பெற்றெடுத்த இனிய இல்லறத்தினர். இந்த எண்குழந்தைகளில் மூவர் ஆண்கள். ஐவர் பெண்கள். ஆண்கள் முறையே சுப்பிரமணியபிள்ளை, கணபதிப்பிள்ளை, குமாரசாமிப்பிள்ளை என்பவராவர். பெண்கள் முறையே வள்ளிப்பிள்ளை, தங்கம்மா, நாகமுத்து, பார்வதியார், இலட்சுமியார் என்பவராவர். இவர்களில் கணபதிப்பிள்ளையும் குமாரசாமிப்பிள்ளையும் பார்வதியார் என்ற மூவருமே கல்வியால் புகழ் நிறைந்தவர்கள். வள்ளிப்பிள்ளை அருணாசலம் என்பவரையும், தங்கம்மா சதாசிவம், என்பவரையும், நாகமுத்து வ. வேலாயுதம்பிள்ளையையும்; இலட்சுமியார் - டாக்டர் வ. சின்னையா என்பவரையும் திருமணம் செய்து வாழ்ந்தனர். பார்வதியம்மையார் மட்டுமே விவாகம் செய்யாது வாழ்ந்தவர்;இவர் கல்வி கேள்விகளில் சிறந்தமையால் பாரதநாட்டுத் தமிழ்ப் புலவர்கள் ஈழம் வந்தக்கால் அவரைக் கண்டு களிப்படையும் பெருமை பெற்றிருந்தார்.

சைவசீலராகிய வல்லிபுரநாதரின் மூன்று ஆண்மக்களில் மூத்த குமாரரான சுப்பிரமணியம் என்பவர் தம் தம்பியர் அனைய கல்வித்தரம் உடையரல்லர் ஆயினும், அரச தொழிலுக்குத்தேவையான அறிவுக்கல்வியுடையவர். ஆன்மீகக் கல்வி நெறியராய் நீறுபூத்த நெருப்புப் போல் நின்ற இவர் தம் கல்வித்தகுதிப் பரடெல்லாம் தம் எச்சமாகப் பெற்றெடுத்த சைவப் பெரியார் சிவபாதசுந்தரனிடம் வெளிப்பட்டு நிற்கும் தவச்சிறப்புடையராய்த் திகழ்ந்தார். தந்தை மகற்காற்றும் நன்றியும், மகன் தந்தைக் காற்றும் உதவியும் இணைந்து முழுமையுறும் இவ்வுலக அறவாளர் இவர்.

திரு. கணபதிப்பிள்ளை அவர்கள் வல்லிபுரநாதரின் இரண்டாவது மகன். நம் பெரியாரின் மூத்த சிறிய தந்தையார். இவர் தமிழ் மொழி, வடமொழி என்னும் இரு மொழிகளிலும் மிக்க புலமை பெற்றவர். வடமொழிக் கல்வியில் தனிசிறந்த புலமையாளர். அம் மொழியரலே அம்மொழியறிஞர்கள் மத்தியில் பல மணிக் கண கில் பேசும் வடமொழிப் பேச்சாளர். இவர் திருவனந்தபுர மகாராசாவின் சமஸ்தான வித்துவானாய் இருந்தவர். மகாராசாக் கல்லூரியில் வடமொழித்துறைத் தலைவராய் அமர்ந்தவர். மனோன் மணீயம் நாடக நூலாசிரியரான சுந்தரம்பிள்ளை அவர்கள் ஆங்குத்

தமிழ்த்துறைப் பேராசாஞக இருந்த காலத்து அவர்தம் நெருங்கிய நண்பர். அவர்தம் தமிழ் நெஞ்சத்துணர்வால் உந்தப்பட்ட கண பதிப்பிள்ளையும் வில்கணியம், இரகுவம்சம் என்ற வடமொழி நூல் களைத் தமிழ் மொழியிற் கொணர்ந்தார். இவருடைய புகழ் ஈழத் திலும் பார்க்க இந்தியாவில் சிறப்புற்று நின்றதெனலாம். இவர் இந்தியாவிலே ஒரு தாசில்தார் மகளாகிய ''சுந்தரம்மா'' என்னும் பெண்ணை மணந்தார். மணந்தாலும் மக்கட்பேறு இவர்க்கு அமைய வில்லை. கந்தசட்டி விரதம் தவருது கைக்கொள்பவர். இதற்காகத் திருத்தணிகைக்குச் செல்வர். அவ்வாறு செல்லுங்கால் ஒருமுறை அத்தலத்திலேயே இறந்தார் என்பர்.

திரு. குமாரசாமி அவர்கள் வல்லிபுரநாதரின் கடைசி ஆண் மகன். நம்பெரியாரின் இளைய சிறிய தந்தையார்; இவர் தமிழ் இலக்கண இலக்கியத்தில் வல்லுநர். புலோலியில் புலத்துறை முற் றிய புலவர்களுள் ஒருவராய் விளங்கியவர். இவர் இயல்பாகவே பொதுமக்களிடம் பொழுது போக்காகப் பேசும் போதும் இலக்கணம் தவருது பேசுபவர், இதனுல் எல்லோரும் இவரை ''இலக்கணக் கொட்டர்'' என்பர். இவர் சிலகாலம் யாழ்/இந்துக் கல்லூரியில் ஆசிரியராக இருந்தவர். அங்கிருந்து கோப்பாயில் இருந்த யூனியன் பயிற்சிக் கலாசாலையில் தமிழாசாஞய்க் கடமை புரிந்தவர். இவர் சிவசம்புப்புலவர், உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை போன்ருேர் களின் தமிழாற்றலுக்கு வழிகாட்டியாய் நின்றவர். நன்னூல் காண்டிகைக்கு விளக்கவுரைக் குறிப்பு எழுதியவர். பாரத நூலுக்கு உரை கண்டவர். இவர் தமது மைத்துனியான ''அம்பிகை'' என் னும் மாதை மணந்து பரஞ்சோதி, தணிகாசலம், சௌந்தரம்மா, சிவப்பிரகாசம் என்னும் நான்கு குழந்தைகளைப் பெற்ற தந்தை யாவர். அப்பிள்ளைகளுள் திரு: சிவப்பிரகாசம் என்பவர் மேல்நாட் டுக் கல்வியிற் சிறந்து மனோதத்துவத் துறையில் கலாநிதியான டாக் டர் பட்டம் பெற்றவர்.

தவச்செல்வியான பார்வதியம்மையார் சிறுபிள்ளையாய் இருக் கும் காலத்தில் தந்தை வல்லிபுரநாதரின் பத்திமையால் அவருடன் வதிந்த, வார்கடைப் பரதேசியார் உண்ணுகையில் அவ்வுணவை எடுத்து உண்டார். இந் நிகழ்வை உணர்ந்த அச்சாமியார் இப்பிள்ளை இல்லறத்தில் புகாது துறவறத்திற்ருன் வாழும் என்று நிறை மொழி சொன்ஞர் என்பர். அவ்வாறே வாழ்ந்த பார்வதியார் இலக் கண இலக்கியங்களை ஐயந்திரிபறக் கற்றவர்: வடமொழித் தேர்ச் சியும் உடையவர். சங்கீத ஞானமும் ஓரளவு இருந்ததென்பர். இவர் மணப் பருவம் வந்தக்கால் 'வித்துவசிரோன்மணி பொன்னம்பலப் பிள்ளையவர்களுக்கு மணம் பேசியபோது அதனை விரும்பாது அனுட்

டானம் செய்யும் செம்போடு வீட்டை விட்டு வெளியேறினர். இதனைக் கண்டுணர்ந்த பெற்றோர்; ''நீ துறவியாகவே நம் இல்லில் இரு'' என்று அணைத்துக் கொண்டனர். இதனுல் அவ் அம்மையார் தமிழ், சமயம் என்ற துறைகளில் ஆழ்ந்த புலமைக்குரிய கல்விப் பயிற்சியாளராய்ச் சிறந்தார். இச் சிறப்பால் குடும்பக் குழந்தைகள் எல்லோரும் இவரிடம் வந்து கல்விகற்று அறிவுடையராயும் புலமையாளராயும் விளங்கியுள்ளனர். அவர்களுள், பண்டிதை திருமதி த. வாலாம்பிகை, பண்டிதை திருமதி தி. பத்மாசனி, உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

## குடிப்பெருமை.

வர்த்தகச் செல்வமும் வளமார் தெய்வப் பழக்க வழக்கமும் உடைய வல்லிபுரநாதரின் மூத்த புதல்வரே சுப்பிரமணியபிள்ளை என்பவர். இவரே நம் சைவப் பெரியாரின் தந்தையாவர். இவர் தமிழ் ஆங்கில மொழிகளில் அறிவுடையராய்த் திருகோணமலை மட்டக்களப்புக் கச்சேரிகளில் சிருப்பராய்க் கடமையாற்றியவர். அக்காலத்தில் ஏற்பட்ட வலியென்னும் நோயால் கடமையைச் செவ்வையாய்ச் செய்யமுடியாமல் போனதால் அதனை நீத்து வீட்டிலேயே காலங் கழித்தார். அவர் உரிய காலத்தில் அதே ஊரில் உள்ள ''வள்ளியம்மை'' யென்னும் மாதை மணந்து நான்கு குழந்தைகளுக்குத் தந்தையானுர். இந்த நான்கு குழந்தைகளில் மஞ்ஞேன்மனி, மகேஸ்வரி. இராஜேஸ்வரி என்னும் மூன்று பெண்கள் அடுத்தடுத்துப் பிறந்தார்கள். ஆண்மகனில்லாக் குறை அவரைப் பெரிதும் வாட்டிற்று. உத்தியோகம் இல்லா நிலையும், புத்திரன் இல்லாக் குறையும் திரு. வ. சுப்பிரமணியத்தாரின் உள்ளத்தில் தெய்வம் என்பதோர் சித்தத்தை உண்டாக்கிற்று. தெய்வ சித்தி வாய்ந்த மாந்தருடன் பழகிப் பத்திமை செய்த. வார் கடைச்சாமியார் என்பவர் அவருடைய மனைக்கு வந்திருந்தார். அவர் சுப்பிரமணியத்தாரின் உள்ளக் கவலையை ஊகித்தறிந்து சுப்பிரமணியக் கடவுளின் மந்திரச் சக்கரம் ஒன்று வரைந்து ''இதனை நாடோறும் நீ பூசனை செய்து பக்தி கொள்வாய்'' என்று கொடுத்தார். சுப்பிரமணியம் அதனைப் பெற்றுப் பூசனை செய்வதோடு தம் இல்லில் அமைந்த வயிரவர் வழிபாட்டையும் புரிந்து வந்தார். இதனோடு திரு. சுப்பிரமணியம் அநேக விரதங்களையும் மேற்கொண்டும் நின்றுர். பெண் குழந்தைகள் பிறந்த பத்தாண்டுகளுக்குப் பின் 1878-ஆம் ஆண்டு - தைத்திங்கள் - முதலாம் நாள் ஓர் ஆண் குழந்தையை இறையருளால் பெற்றெடுத்தார். அக்குழந்தையே மேல் கீழ் நாடுகள் சைவ

சித்தாந்தத்தை விளங்கவைத்த மேன்மைச் சைவ அறிஞஞக மதிக்கப் பெற்ற சிவத்திரு. சு. சிவபாதசுந்தரஞர் என்க.

| | | | |
|---|---|---|---|
| செவ் | | | |
| சுக். சனி, ராகு. | ஈசுவர ௵ தை மீ செவ்வாய்க் | கிழமை கேட்டை நாலாம் பாதம் | |
| | | | கேது |
| சூரி, புத குரு. | சந். | | ல |

முருகப் பெருமானை மெய்யன்போடு வணங்கி வந்ததோடு வார்கடைச்சாமியார் சிவசம்புப் புலவர் முதலானேரையும் ஆதரித்து ஆசி பெற்றும்; நல்லூர் ஆறுமுக நாவலரையும் அமையம் பொருந்துழி வணங்கி வாழ்த்தையும் பெற்று அடக்கமும் பணிவும் கொண்ட நற்பேறே சுப்பிரமணியத்தார்க்கு நான்காவது குழந்தை ஆண்குழந்தையாய்க் குடிவழிக்குக் குன்ருத விளக்காய் அமைந்ததென்க.

திரு. வ. சுப்பிரமணியபிள்ளை அவர்களின் பெண்குழந்தைகளில் முதற்பிள்ளையான மனேன்மணி என்பவர் கனகசிங்கம் என்பவரை மணந்தார். இம்மனேன்மணியின் மகளின் மகளான வலாம்பிகை பார்வதியம்மையாரிடம் தமிழ் கற்று, மதுரைச் சங்கத் தமிழ்ப் பரீட்சையில் சித்தியெய்திய தமிழ்ப்பண்டிதை யாவார். நம் சைவப் பெரியாரிடம் சோதிடமும் கற்றவர். மாவட்ட நீதிபதியாய் இருந்த தனபாலசிங்கத்தை மணந்தவர். இரண்டாவது பெண்மகளான மகேஸ்வரி என்பார் உரையாசிரியர் என்று வித்துவ சிரோமணியால் புகழப் பெற்ற மட்டுவில் க. வேற்பிள்ளை என்பவரை மணந்தவர், இவருக்கு ஆசிரியர், திருஞானசம்பந்தர் மகாலிங்கசிவம், கந்தசாமி B. A. நடராசா B. Sc. என்னும் ஆண்குழந்தைகள் உண்டு. இவர்களின் அறிவாற்றல் வளர்ச்சியில் நம் சைவப் பெரியார் பெரிதும் ஈடுபாடாய் இருந்தவர் என்பர். மூன்ருவது பெண்மகளான இராசேஸ்வரி என்பவர் சோமசுந்தரம் என்பவரைத் திருமணம் புரிந்து கொண்டார். நம்பெரியார் திரு. சு. சிவபாத சுந்தரம் என்பார் தம் தந்தையின் மூத்த சகோதரியாம் வள்ளிப் பிள்ளையின் மகளின் மகளாம் திலகவதியாரை மணந்தவர். இவரின் வீட்டுப் பெயர் முத்து என்பர். இவ்வாறு குடிவழிச் செய்தியைக் கண்டு கொள்க.

# கல்விவாழ்வு.

குடிவழிச் செய்தியில் நம் சைவப் பெரியாரின் பிறப்புச் செய்தி உள்ளடக்கிய படியால் அவரின் ஆன்ற அறிவின் வாழ்க்கைக்குரிய கல்வி வாழ்வின் செய்தியைக் கூறல் நலமாகும். முருக பக்தரான திரு வ. சுப்பிரமணியம் அவர்கள் பத்தாண்டுப் பத்திமையால் பரிந் தெடுத்த நம் சைவப் பெரியாரின் கல்வியில் கண்ணும் கருத்துமாய் இருந்தார். இதனால் தம் சகோதரியாகிய பார்வதியம்மையாரின் புலமைசால் நிழலில் உலாவவிட்டார். தம் மனத்தையும் புலனை யும் கல்வியிலும் கடவுள் வாழ்விலும் செலுத்தி, வார்கடைச் சாமி யாருக்குப் பணிவிடை புரிந்து நின்ற பாருத்தை என்று பரவசமா கப் பேசும் தமிழ் மூதாட்டி பெரும் விவேகி. இதனால் நம் பெரியார் இவரிடம் கல்வி கற்பதில் பெரிதும் ஆர்வம் காட்டினார். தம்மீது ஆராக் காதலாய்க் கல்வியறிவூட்டிய அருமை பெருமையைப் பிற் காலத்தில் பெரிதும் எண்ணிய பெரியார் ''அகநூல்'' எழுதி முடித்த ஞான்று அந்நூலை அவருக்கே நன்றியாகக் காணிக்கையாக்கினார். அதிலே அவர் அவரைத் ''தவச் செல்வி'! என்றே குறித்துள்ளார். குடும்பக் குழந்தைகளுக்குக் குன்றாக் கல்வி விளக்காக அமைந்த தவச் செல்வியின் அரவணைப்பில் அருந்தமிழ்க் கல்வியையும் சைவ சமய அறிவு ஆசாரங்களையும் சிறப்பாகப் பெற்றுப் பொதுவாகப் பாடசாலைக் கல்வியிலும் தேறிய சைவப் பெரியாரை அவர் தந்தை சுப்பிரமணியபிள்ளை உயர்கல்விக்கு இந்தியாவே சிறந்தது என்று அங்கு அனுப்ப முடிவு செய்தார். அம் முடிவின்படி நம் பெரியா ரைத் தனியே விட்டுப் பிரிந்து வாழமுடியாத நீர்மையில் தந்தை யார் இருந்தார், எனினும் ஒருவாறு மனந்தேறி அவரையும் அழைத்துக் கொண்டு சுப்பிரமணியபிள்ளை அவர்கள் தம் தம்பியார் திரு. வ. கணபதிப்பிள்ளை என்பர் இருந்த திருவனந்தபுரத்திற்குச் சென்றார். அங்கு மகாராசக் கல்லூரியில் தம்பியாருடன் படிக்கச் செய்தார். தம் மனமும் தம் மகனின் மனமும் அமைதி கொள்ளும் வரைச் சுப்பிரமணியத்தார் அங்கே இருந்தார். பின் இவர் யாழ்ப் பாணம் வரப் பெரியார் அக் கல்லூரியில் எவ், ஏ வகுப்பு வரை படித்தார். இக் காலத்திலேயே பெரியாரவர்கள் மூத்த சிறிய தந் தையார் கணபதிப் பிள்ளையிடம் சமஸ்கிருதம் நன்கு கற்றுக் கொண் டார். எவ், ஏ வகுப்புத்தேறிய பெரியார் பீ, ஏ வகுப்புப் படிக் கத் திருச்சி சென்யோசேவ் கல்லூரிக்கு வந்தார். இது கத்தோலிக் கக் கல்லூரியாய் இருந்தும் இவரின் சைவச்சால்புக்கு இடையூறில் லாததால் ஈராண்டுப் படிப்பை இனிது முடித்துக் கொண்டார். இவர் அங்கு படிக்குங்கால் இடைவேளைகளில் நூல்நிலையத்திலுள்ள மேல் நாட்டுத் தத்துவ நூல்கள், தருக்க நூல்கள் என்ற இவைகளைத்

தேர்ந்து படிப்பாரே அன்றிக் கதை நூல்களைக் கண்ணெடுத்தும் பாரார் என்பர். இதனால் பட்டப் பரீட்சையில் தருக்கம் கணிதம் என்ற பாடங்களில் சிறப்பான சித்தியைப் பெற்றார். இவ்வாறு சென்னை சர்வகலாசாலைப் பட்டதாரியாகி யாழ்ப்பாணம் திரும்பினார். இவரே அக்காலத்தில் சைவப் பட்டதாரிகளில் முன்னவராய் இருந்தார். அப்போது அவருக்கு இருபது வயதாகும்.

## தொழில்வாழ்வு.

இருபது வயது கொண்ட நம் சிவபாதசுந்தரனார் புலோலியில் உள்ள சைவப்பாடசாலையில் முதற்கண் கல்வி கற்பித்தார். இதன் பின் வேலாயுதம் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்து கற்பித்தார். இவ்வாறு கற்பித்து வருங்காலத்தில் பெரியாருக்குச் சட்டத்தரணியாக வரவேண்டும் என்ற அவா மனதில் எழுந்து கொண்டிருந்தது. அதற்கு லத்தீன் மொழியறிவு தேவை என்பதை அறிந்து அது கற்கக் கூடிய சூழ்நிலையை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார். அவ்வேளையில் திருகோணமலையில் ஒரு கத்தோலிக்கப் பள்ளியான சென்-யோசப்பில் தலைமையாசிரியராய்ச் சேர்ந்தார். இவரின் தலைமைப் பணியில் பள்ளி நல்ல செல்வாக்கோடு திகழ்ந்தமையால் இவரே அப்பதவியில் நீள இருக்க வேண்டும் என்று குருமார் விரும்பினர். அக் காலத்திற்றான் பாதிரிமாரோடு ஊடாட வேண்டிய வாய்ப்பும் அவர்க்குக் கிட்டியது. குருமாரிடத்தில் எள்ளளவு வெறுப்பும் பெரியார் காட்டியது மில்லை; கொண்டதுமில்லை. அவர்களின் மதமாற்றப் போக்குத்தான் பெரியாரின் மனத்தை வருத்தியது. அங்கே தான் சைவசமயத் தொண்டு செய்ய வேண்டும் என்ற எண்ணம் தடித்து வேரூன்றியது. அவருக்கு அப்போது முப்பது வயது ஆயிற்று. இலத்தீன் படித்துச் சட்டத்தரணியாக வேண்டும் என்ற எண்ணம் இதனால் மாறிவிட்டது.

கத்தோலிக்க குருவோடு பலவிடயங்களைப் பற்றி விவாதித்துள்ளார். விவாதத்தில் ஓர் ஐயம் எழுந்தது. ''ஒருவன் சரியென்று அறிந்தபடி ஒழுகுவான்'' என்றார் நம் பெரியாரவர்கள். ''அறிந்திருக்கலாம், ஆனால் அதன்படி ஒழுகுவது மிகவும் அருமை'' என்றார் குருவானவர். ''ஒழுகவில்லை என்பது அவன் அறியவில்லை என்பதைக் குறிக்கிறது'' என்றார் பெரியார். இப்பதில் தான் நமது பெரியாரின் வாழ்க்கைக்கு அச்சாணி. தாம் மெய்யென்று எதனை அறிந்தாரோ அதன் படி ஒழுகியே இருக்கிறார். அவருடைய மனதிற் குடிகொண்டது ஒரு சைவனாவது யாழ்ப்பாணத்தில் இருந்துவிட்டால் அதுவே போதுமானது என்ற ஒரேயொரு ஆசையாகும்.'' என்று அவருடைய

அபிமானி ஒருவர் எழுதியுள்ளார். நீதிச் சட்டத்தரணியாகிச் சமுதாயத்தையும் அரசையும் ஆளுமை கொள்ள எழுந்த அவர் உள்ளத்தை, கற்ற காலத்திலும் கற்பிக்க எழுந்த காலத்திலும் கிறீஸ்துவத்தின் சமயச் செயல்கள் சைவநீதித் தரணியாக மாற்றிய விந்தையை ஈண்டு நாம் காண்கின்றோம்.

யாழ்ப்பாணத்தில் அந்த ஒருசைவன் ஏன் நானாக அமையக் கூடாது என்று தம்மைத்தாமே சிவசோதனைக்கு ஆளாக்க முனைந்தார். இந்த முனைப்பால் அந்த கத்தோலிக்கப் பள்ளிவாழ்வை இரண்டாண்டில் - அதாவது 1904ம் ஆண்டளவில் விடுத்து யாழ்ப்பாணம் வந்தார். யாழ்ப்பாணம் வந்த பெரியர் சுழிபுரம் செல்லப்பா அமைத்த விக்ரோறியாக் கல்லூரிக்குத் துணை அதிபராய் வந்து சேர்ந்தார். அப்போது அக்கல்லூரிக்கு அதிபராகச் சிமோல் என்பவர் இருந்தார். இவருக்கும் நம் பெரியாருக்கும் கருத்து வேறுபடவே வேலாயுதம் பாடசாலை, மானிப்பாய் இந்துக்கல்லூரி முதலான கல்வி நிலையங்களிலும் கற்பிக்கும் தொழிலை நடாத்தினார். இதன்பின் கொழும்பில் உள்ள கொச்சிக்கடைப் பகுதியில் சேர்பொன் இராமநாதன் என்பவர் நிறுவிய பொன்னம்பலப்பள்ளிக்குத் தலைமை ஆசிரியராக அமர்ந்தார். இந்தத் தலைமையாசிரியத் தொழிலே பெரியாருக்கும் இராமநாதன் துரை அவர்கட்கும் இடையில் நெருங்கிய தொடர்பை உருவாக்கியது. இந்த நட்பியல் ''சைவப்பிள்ளைகள் படிப்பதற்குச் சைவக்கல்லூரிகள் போதா; யாழ்ப்பாணம், இந்துக்கல்லூரி போன்ற ஒரு சைவக்கல்லூரியைத் தாங்களும் யாழ்ப்பாணத்தில் நிறுவவேண்டும்'' என்ற சைவசீலக் குரலை இராமநாதன் துரையவர்களிடம் எழுப்பச் செய்தது. இந்தக் குரலின் அடித்தளமே பரமேஸ்வரக் கல்லூரியின் தோற்றம் என்க. இப்பள்ளிப்பெயரைக் கூட நம் பெரியார் அறிவித்திருக்கலாம். இதனால் நம் பெரியார் பொன்னம்பலம் பள்ளியை விடுத்து இக் கல்லூரிக்கு மூர் என்ற ஆங்கிலேய அதிபர்க்குத் துணைத் தலைமை ஆசிரியராக வந்துள்ளார். பெரியாரின் எண்ணத்தில் முகிழ்த்தெழுந்த பரமேஸ்வராக்கல்லூரி இலங்கைப் பல்கலைக் கழகத்தின் கிளைக்கழகமாகி; இனித் தனிப் பல்கலைக் கழகமாகத் தலையெடுத்து நிற்பதென்றால் பெரியோர்களின் சிந்தனைப் பெருமை எப்படிப்பட்டதென்பதை இதன் மூலம் நாம் உணரலாமன்றோ? இராமநாதன் துரையவர்கள் சமயம்-கல்வி விடமாக முடிவுகள் எடுக்கும்போது நம் சைவப் பெரியாருடன் கலந்து ஆலோசிக்காமல் இருந்தால் அம் முடிவில் ஒரு நிறைவு பெறாதவராகவே இருப்பார். இதனால் பெரியாருடன் கலந்து எண்ணுவதைத் தவறவிடுவதில்லை. இவ்வாறு சேர். பொன். இராமநாதன் அவர்கட்கும் பெரியார் அவர்கட்கும் உள்ள தொடர்பின் முதிர்வைப் பெரியார் எழுதிய ''சைவபோதம்'' முதலாம் புத்தகத்திற்கு அவர்

அளித்த அணிந்துரையும்; ''இந்து மதத்திலே சைவசித்தாந்தம்'' என்ற ஆங்கில நூலை இராமநாதன் துரைக்குக் காணிக்கையாக்கியது மான செய்திகள் எடுத்துக் காட்டுகின்றன.

பெரியார் பரமேஸ்வராவைக் கருவாக்கி உருவாக்கும் போது வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் மதமாற்ற மூலம் கல்வி கற்பிப்பதைத் தாங்காத மனத்தால் மலர்ந்த விக்ரோறியாக் கல்லூரி அதிபர் சிமோல் என்பார் விலகினர். இதனால் கல்லூரியை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு நிகராக நடத்தக் கூடிய அதிபர், முன்னே துணை அதிபராய் இருந்து விலகிய திரு. சு. சிவபாதசுந்தரம் என்பவரே என்று முகாமையாளரான திரு. க. செல்லப்பா என்பவர் எண்ணினர். எண்ணிய வண்ணம் அவரிடம் போய், ''வலிகாமம் மேற்கில் சைவ சமயம் தளராது தலையெடுத்து நிலைக்க வேண்டின் இந்த விக்ரோறியாக் கல்லூரி செம்மையாக நடை பெற வேண்டும். அதற்காகத் தாங்கள் அதிபர் பதவியை ஏற்றல் வேண்டும்'' என்று பணிவன்போடு வேண்டினர். பல்கால் வேண்டி அவரைச் சிந்தனைக்குள்ளாக்கினர். ஆம், உண்மையே. யாழ்ப்பாணத்தின் கிறிஸ்தவரின் கல்வி ஆதிக்கத்தின் கேந்திர இடம் யாழ்ப்பாணக் கல்லூரி தான்; அதன் வேகத்தை மட்டுப்படுத்த வேண்டின் நான் அங்கு போதல் நேரியது தான் என்று இவ்வாறு எண்ணித் திரு. இராமநாதன் துரையவர்கட்கு ஒருவாறு அறிவித்து அவரிசைவோடு 1924ஆம் ஆண்டு அதிபர் பதவியை ஏற்றுக் கொண்டார். இவர் இக் கல்லூரிக்கு வர முக்கியமாக பெரியாரின் மனத்தை மாற்றியவர் திரு. வ. குமாரசாமிப் புலவர் என்பர். இவர் கலாநிதி கு. சிவப்பிரகாசத்தின் தந்தையாவர்.

## விக்ரோறியா வாழ்வில்.

### பிரமச்சாரியம்:

விக்ரோறியாக் கல்லூரி வாழ்வில் நம் பெரியாரின் செய்திகளை நினைவுறுங்கால் அவரின் இல்லற வாழ்வை முதற்கண் நாம் நினைவுறலாம். இவ்வாழ்வு பெரிதும் நீடித்து இணையுற வில்லை எனலாம். பிரமச்சாரியாய்ச் சைவசமயக் கல்வி வளத்திற்கு உழைக்க வேண்டும் என்ற அவாவை அவரின் மாமியார் போன்றோர் முறியடித்தாலும் பெரியாரின் கண்டிப்பான நேரிய வைதிகதரும மனப்பாங்கு இல்லின்பத்தில் இனிதுறவைக்கவில்லை எனலாம். இதனால் இல்லறப் பிரமச்சாரியாய் இருக்க எழுந்தார். இதனை வானப்ரத்த வாழ்வு என்று வருணாச்சிரம நோக்கில் கூறிவிடலாம். கல்லூரியில் முதற்

கண் வந்து துணை அதிபராக இருந்தனை 1906 ஆம் ஆண்டுச் செய்தியாகக் கொள்ளலாம். இல்லறப்பிரமச்சரியம் இனிதுற இயல்வதற்குப் புலனடக்கத்தில் தலையாய நாவடக்கத்தில் நலனுற உண்ணும் உணவுவகையில் விரதங் கொண்டார். மசாலைவகைப் பொருள்களைக் கறிவகையில் மிகச் சொற்பமாகக் கலந்து உட்கொள்வார். (இவ் வகையான உணவு ஒரு நாள் இரவு உண்ணும் பேறு எனக்குக் கிடைத்தது) காலை, மாலைகளில் தியானம் செய்வதில் உறுதி கொண்டார். ஒவ்வொரு வெள்ளிதோறும் மூளாயில் உள்ள முருகன்- பிள்ளையார் கோயில்களுக்குச் சென்று வழிபடுவார். சைவ இலக்கிய-சாத்திர-தோத்திர நூல்களைப் பல்கால் படித்தலோடு, இவைகளையொட்டிய உரையாடல்களைக் கற்ருரிடத்தும்-தம்மிடம் நெருங்கிக் கற்கும் மாணவரிடத்தும் மேற்கொள்வார். இந்தத் தனிவாழ்வுக் கோட்பாடுகளால் சமுகவாழ்வாம் கல்வி-சமயம் போன்ற துறைகளில் குறைவிலாது காலத்தைக் கழிக்க அவரால் முடிந்தது.

## கிராமப் பள்ளி:

இந்த விளைவினுல் விக்ரோறியாக் கல்லூரியை அண்டிய கிராமங்களில் தனிப்பட்டோர் மூலம் சைவப் பள்ளிகள் நிறுவச் செய்வதிலும் கோயில்களில் ஆகமநெறிக்குத்தகச் சமயக் கிரியைகளில் சைவசீலம் அற்ற செயல்களை எடுத்துக் காட்டி அவற்றைக் கைவிடச் செய்வதிலும் முனைந்தார். கிராமப் பள்ளி நிகழ்வில் மூளாய் சைவப் பிரகாச வித்தியாசாலையைச் சிறப்பாகச் சொல்லலாம். பெரியார் ஆசிரியராகவும் அதிபராகவும் விக்ரோறியாவில் அமைந்திருந்த வேளையில் விதானை ஆறுமுகம் மகன் சின்னத்தம்பியின் மக்களில் மூத்தவரான கந்தையாவும் இளையவரான நாகலிங்கமும் நம் பெரியாரில் பெரிய ஈடுபாடு உடையவராயினர். விபூதி, உருத்திராக்கம் என்பவைகளை நிலையாக இவர்கள் அணிபவர். இதனுல் நம் பெரியார் இவர்களில் அன்பு கொண்டு நடக்குங்கால் சைவம் பிரகாசிக்க ஒரு சைவப் பாடசாலையை மூளாயில் கந்தையா உபாத்தியாயரிடம் அறிவுறுத்திக் கட்டுவித்துள்ளார். அக்காலையில் நம் பெரியார் மூளாய்க்கு இரு கோயில்களும் இப்பள்ளியும் மூன்று கண்களாகும் என்பர். அப்பள்ளி நடைபெறுவதற்குத் தம் இனத்தவரான ஆசிரியர் தம்பு, பண்டிதர் மகாலிங்கசிவம் போன்றவர்களை அழைப்பித்து அமர்த்தியுள்ளார். இங்ஙனமே இவரிடம் படித்து மலாயாவில் தொழில்புரிவர்கள் ஓர் ஐக்கியசங்கம் கண்டு சுழிபுரத்தில் ஐக்கிய சங்க வித்தியாசாலை என்ற பள்ளியைத் தொடக்கினர். இவ்வாறே தொல்புரத்தில் மு. கனகசபை, பண்ணுகத்தில் திரு மு. கந்தையா என்பாரும் முறையே விக்கினேஸ்வர வித்தியாசாலை, மெய்கண்டான் வித்தியா

சாலைகளை நிறுவிச் சைவ வித்தியா விருத்திச் சங்கத்திடம் கையளித்தனர்.

## கிராமக் கோயில்:

இவரின் சிறப்பான ஒரு கைங்கரியம் கிராமக்கோயில்களைச் சீர்திருத்தலாகும். தொல்புரம் வழக்கம்பரை அம்மன் கோயிலில் நிகழ்ந்த பலியிடும் ஈனச் செய்கையை நிறுத்துவதற்குத் திரு. மு. கனகசபை மு. கந்தையா போன்ற தம்மிடம் படித்த மாணவர்களைக் கொண்டு பணியாற்றி நிறுத்தியதேயாம். கோயில்களில் பொய்க் கால் கை வைத்துச் சாத்தும் வழக்கையும் நிற்பாட்டியுள்ளார்; தாதி நடனங்களைக் கண்டித்து நிறுத்தியுள்ளார். இவ்வாறு விக்ரோறியாவைச் சூழ்ந்த கிராமங்களையும் கிராம மக்களையும் சைவ சீலச் சிறப்புக்கு உள்ளாக்கிய பெருமை நம் பெரியார்க்கே உண்டு.

## கல்வி-சமய-நூல்கள்:

இவர் ஆசிரியர்கள் பிள்ளைகளுக்குச் செம்மையாகவும் தெளிவாகவும் மாணவர்களின் மனப்பாங்கு உணர்ந்து கற்பித்தல் வேண்டும். தனக்குத் தெரிந்த படிப்பிக்கும் முறையையும் விதிகளையும் மற்றையோர் அறிந்து சைவக் கல்வி வாழ்வு சால்புறுவதற்காக அகநூல், படிப்பித்தலின் முறையும் விதியும் என்னும் இரு நூல்களை எழுதியுள்ளார். சைவப் பாடக் கல்வி முறைக்குச் சைவபோதம் என்ற மூன்று பாடநூல்களை எழுதியுள்ளார். அந்நூல்களில் ஆசிரியர்களுக்கு அறிவிப்பு என்ற தலைப்பிலும் குறிப்புரை எழுதியுள்ளார். திருக்குறள் மணிகள், திருவாசக மணிகள், சைவசமய சாரம், சைவ சமயத்தின் பெருமை போன்ற நூல்களை எழுதிப் பள்ளிப்பிள்ளைகள் பயன் படச் செய்துள்ளார். இவ்வாறு சைவக்கல்விப் பாடமும் கல்விப் பாடமும் இவரின் எழுத்துப் பணியால் எழுச்சி பெற்றன. சுருங்கக் கூறின் மாணவர்களுக்கும் மாணவவாசிரியர்களுக்கும் எழுதிய எழுத்துப்பணி தமிழ்-சைவத்துறைகளை அணிசெய்தெனக் கூறலாம்.

## கல்விப் பகுதிச் செல்வாக்கு:

கல்லூரி நிருவாகத்திலும், கற்பித்தலிலும், அவைகளுக்கு வேண்டிய கருவி நூல்களை ஆக்கலிலும் முனைந்த செயல்களால் இலங்கைக் கல்வித் திணைக்கள அதிகாரிகள் பெரியாரைப் பெரிதும் கவர்ந்து நின்றார்கள். முன்னைநாள் கல்வி மந்திரியார் கன்னங்கரா, கல்விப்

பணிப்பாளர் பெரேரா, கலாநிதி சு. நடேசன் திரு. எவ். மக்றே என்பர்களைக் குறிப்பிடலாம். இவர்களின் நட்புறவால் பெரியார் தம் கல்விக் கருத்துக்களை எல்லாம் விளக்கி அரசாங்கத்தின் கொள்கைத் திட்டத்திலும் அமையச் செய்துள்ளார். சமயக் கல்வி கட்டாய பாடமாக அமைவதற்கும், அக்காலக் கல்விப் பாடவிதானம் அமைப்பதிலும் பெரியாரின் பங்கு பெரிது, மேற்கூறிய அதிகாரிகள் கல்விக் கருத்துக்களை நிதானித்து முடிவு செய்யும் முன்பு இவரைக் கொழும்புக்கழைத்துக் கலந்து எண்ணுவர்; அவ்வளவுக்கு அவரின் பேராற்றலை அவர்கள் மதித்தனர். திரு. பெரேரா அவர்கள் கல்வி தொடர்பான நூல் எழுதிய போது பெரியாரின் உதவி தாராளமாகக் கிடைத்தது என்று அவர் அந்நூல் முகவுரையில் எழுதியுள்ளதையும் நோக்கலாம்.

## நீதிமன்ற நடுவர்:

உயர் நீதிமன்றங்களின் நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் போதெல்லாம் நம் சைவப்பெரியார் நடுவர் என்னும் யூரிமார் சபையின் முதல்வராய் இருந்து வழக்குகளை வெகு திறமையாக விசாரித்து நீதி அரசருக்கு நீதி வழங்க உறுதுணையாய் இருந்தவர். பிள்ளை அவர்கள் பெருஞ் சிந்தனையாளர் ஆதலின் எடுத்துக்கொண்ட விஷயத்தை நன்கு ஆராய்ந்து தெளிவடைந்த பிறகு தான் அறுத்தறுத்துப் பேசுவார். எனவே அவரைக் கண்டாலே எதிரிகள் பக்கத்து நியாயவாதிகள் சிலர் அவர் நடுவர் அவையில் இடம் பெறுவதைத் தடுத்து விடுவதற்கு முயற்சி செய்வதும் உண்டு. அவ்வளவுக்குச் சைவப்பெரியாரின் நேர்மையும், அறிவாற்றலும் அதிகாரத்திற்கு எட்டுணையும் அஞ்சாது நடுவர் சபையினருக்கு நீதிகளை எடுத்துக் கூறுதலிலும் மிக்கு விளங்கினர்.

## கல்லூரிப் பணியில்:

ஆசிரியர் சங்கங்கள், கல்விக்கழகங்கள், சைவ மாநாடுகள், நலன்புரிச் சங்கங்கள் என்பவைகளில் பெரியார் தலைவராய் இருந்து உயர்ந்த இலட்சியங்களையும் நல்ல கருத்துக்களையும் பிறர் மனத்தில் கொள்ளச் செய்து பணியாற்றினர். இவ்வாறு வெளிமுகப் பணியில் விரைந்து விளங்கியது போலவே அகமுகப்பணியாம் விக்ரோறியாக் கல்வி நிலையத்திலும் இந்தியாவிலிருந்து சில நல்லாசிரியர்களை வருவித்து அதன் நிலையை உயர்த்தியுள்ளனர். எடுத்துக்காட்டாக உயர் திரு. இ. நாராயணமேனன் போன்றோர்களைக் கூறிவிடலாம். இவ்வாறு நல்லாசிரியர்களை ஏற்படுத்தி நற்கல்வி ஊட்டு

வதற்கேற்பப் பிள்ளைகள் கல்லூரியிலும் வீட்டிலும் மாணவர்களின் வாழ்க்கை முறை சீரியதாக அமைகின்றதா என்பதையும் ஊக்கத்துடன் கவனிப்பர், சைவ ஒழுக்கம், அடக்கம், பொறுமை, கடவுள் பக்தி, குருபக்தி, அடியார்பக்தி கொண்ட பெரியார் தன்னைப் போலவே தன்னிடம் கற்ற மாணவர்களும் அமைய வேண்டும் என்று சன்மார்க்க சமுதாயத்தை எதிர்பார்த்துத் தன் கடமையை முழு வலிமையோடு செய்துள்ளார். நாவலர் காட்டிய வழிகளையே எல்லோரும் கடைப்பிடித்து வரவேண்டும் என்று மாணவர்களிடையே வற்புறுத்திவந்தார். ஒருமுறை ஒருமாணவர் ''ஆன்ம ஈடேற்றத்திற்கு ஆலயவழிபாடு அவசியமா?'' என்று கேட்டான்: அதற்குப் பெரியார், ''மாணிக்கவாசகர் ஆலய வழிபாடு தவறாது செய்தார். நீ அவரினும் கூடிய ஆன்ம வளர்ச்சி உடையவரானல் ஆலயவழிபாட்டைச் செய்யாது விடும்'' என்று மறுமொழி கூறினர். மேல் நாட்டு–இந்திய நாட்டுத் தத்துவ நூல்களை நுணுக்கமாகப் படித்தபடியால் கிறிஸ்துவ பள்ளியில் படித்து வந்தவர்கள் தர்க்க குதர்க்கத்தோடு வரும் சைவம் விளங்காத இளைஞர்களை இதயத்திற்கொண்டே இரண்டாம் சைவபோதம் ஓர் ஔடதமாக அமைய எழுதினர் என்க.

1929 ஆம் ஆண்டு தொடக்கம் 1931 ஆம் ஆண்டு வரையில் கல்லூரி வாழ்வோடு ஓர் அரசியல் ஆர்வநோக்கும் நம் பெரியாரிடத்தில் அரும்பியது. இதனல் இவர் அரசியல் வாதியாகவோ — ஞானியாகவோ மலர்ச்சி பெறவில்லை. அவ் ஆர்வம் எப்படி விரைவுற்றதோ அப்படியே மடிவுற்றதெனலாம். 1930 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மாணவர் மகாநாட்டில் கலந்து தலைமைதாங்கியது விக்ரோறியாக் கல்லூரி வாழ்வில் குறிப்பிடத்தக்கதேயாம். சைவப் பிள்ளைகள் கிறிஸ்தவ பள்ளிகளில் பயின்று, சைவ சமயத்தைச் சால்பறச் சாற்றிய அச்சமய ஆசிரியர்களில் உரைகளால் அலைப்புண்டு அவமாய்ப்போவதைக் கண்டுணர்ந்த பேருணர்வால் அக்காலத்தில் பள்ளிகளில் சமஆசனம் வேண்டும் என்று நிகழ்ந்த கிளர்ச்சிக்குச் சைவசமயத் தீண்டாதவர்களைக் கிறீஸ்தவராக மாற விடக்கூடாது என்ற நோக்கால் செவிகொடுத்து மாணவர் மகாநாட்டில் ஈடுபாடுகொண்டார். அப்போது அவர் சாதி என்பது தொழிற்பிரிவினையை ஆதாரமாகக் கொண்டுவந்தது ... ''குறித்த ஒரு சாதியின் ஒழுக்க விதிகளிலிருந்தும் பிறழ்ந்து ஒதுக்கப்பட்டவர்கள் தான் இன்று தீண்டாதார் எனப்படுவோராக இந்து சமுதாயத்தில் இருக்கிருர்கள். வர்ணுசிரமதருமத்தில் தீண்டாமை என்ற ஒன்று இருக்கவில்லை. சமாதான மறுப்பு போன்ற தீமைகள் இருப்பதற்கு நியாயமும் இல்லை. தீண்டாமை என்பது அந்நிய படையெடுப்புடன் — அடிமை வியாபார முறையுடன் வந்திருக்க வேண்டும்'' ...... என்று

கூறியுள்ளார். அவரின் அடிமனம் தமிழரின் பண்பாடு சைவம் என்பதைத் தெரிந்து கைக்கொள்ளவேண்டும். மற்றையவை எல்லாம் மறைந்தொழிய வேண்டும் என்பதேயாம். இஃது அவரின் எந்தவிதமான பின்னணிக் கருத்துக்களில்லாமல் தனியே தமிழரின் பண்பு நோக்கில் பழுத்த சமயக் கருத்தென்க. இவர் திரு. சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கட்கு எழுதிய ஒரு கடிதத்தில்:- ''சைவ சமயத்தவர்கள் இதர சமயத்தவர்களால் வஞ்சிக்கப்பட்டுச் சைவசமயத்தைக் கைவிடுதலைத் தவிர்க்க வேண்டும் என்பது எனது பேராசை. சில வாரங்களின் முன் சேலம்சில்லாவில் மூன்று கிராமங்கள் முற்றுகக் கத்தோலிக்க மதத்துட் பிரவேசித்தன வென்றும், வேறு மூன்று கிராமங்கள் பிரவேசிக்கும் என்றும் ஒரு பத்திரிகையில் வாசித்தேன். சித்தியாரில் முதற்பாகம் பிறமதகண்டனம்; அதற்கும் அவ்வளவும் முதன்மையுள்ளது; நான் என் வாழ் நாளைக் கிறிஸ்துமத கண்டனத்துக்கே அர்ப்பணம் செய்திருக்கிறேன். கிறிஸ்து மத கண்டன நூலொன்று விரிவாக எழுதுவதற்கு நான் தொடங்கியபோது சைவ நூல் ஒன்றுயினும் எழுதுவதற்கு முன் பிறமத கண்டன நூல் எழுதுதல் பொருத்தமற்றதெனக் கண்டு சைவபோதம் முதற்புத்தகத்தை எழுதினேன், அதுபோதிய தன்றெனக் கண்டு இரண்டாம் புத்தகத்தை எழுதினேன். இப்படியே மற்றவைகளையும் எழுதினேன் இவை என்னுடைய நேரத்தைக் கவர்ந்தமையால் நான் தொடக்கத்திலே எழுதுவதற்கு எண்ணியிருந்த கிறிஸ்துமத கண்டன நூல் எழுதப்படாமற்போயிற்று. களையை (Weeds) அழித்தாலன்றி பயிர் வளரமாட்டாது. கிறிஸ்துமதச் செல்வாக்கை அழித்தாலன்றி சைவம் வளரமாட்டாது ......'' என்று எழுதியுள்ளதையும் நோக்குக. இந்த நோக்கிலேயே விக்ரோறியாக் கல்லூரியையும் விளங்கவைத்தார். தன்னுடைய ஆசிரியத்துவத்தையும் அரணுக்கிக் கொண்டாார்.

## ஆசிரியத்துவம்:

*1898* ஆம் ஆண்டு சென்னை சர்வகலாசாலைப் பட்டதாரியான நம் பெரியார் அவர்கள் கற்கும் காலத்திலும், ஈராண்டு திருகோணமலையில் கற்பித்தகாலத்திலும் சைவக்குடும்பப் பிள்ளைகள் கிறிஸ்தவக் கல்விநிலையங்களில் சைவச்சால்பும் அறிவும் அற்றுக் கல்விகற்கும் இழிதகைமையை நீக்குவதே தம் கடனுகக் கொண்டார். இதனுல் சைவாசிரியர்களையும் சைவப்பள்ளிகளையும் உருவாக்குவதற்கு ஒரு சங்கம் காண்பதே சரியானநெறியென்று இராமநாதன் துரையோடு திரு. சு. இராசரத்தினம் அவர்களையும் உட்கொண்டு ஆலோசனை செய்தார். இதன்படி சேர். பொன். இராமநாதனைத் தலைவராகவும் திரு. சு. இராசரத்தினம் அவர்களைச் செயலாளராகவும் பள்ளி

களின் முகாமையாளராகவும் கொண்ட சைவ வித்தியா விருத்திச் சங்கம்கண்டார். தாமும் ஒருமுறை தலைவராகவும் இருந்தார். இச் சங்கத்தால் சைவாசிரியர் பயிற்சிக்கலாசாலையும், கிராமங்கள் தோறும் சைவப்பள்ளிகளும் சிறந்தன. இப்பணியோடு தாம் தலைமைகொண்ட விக்ரோறியாக்கல்லூரியிலும் பிள்ளைகளைச் சைவ உள்ளத்தோடு கற்பிக்கும் கல்விப் புலமைநிரம்பிய ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்துத் தாமும் அதற்குத்தக நிற்கும் நிலையையும் மேற்கொண்டார். அதிபரானவுடன் தலைப்பாகையும் மூடும்நீண்ட அங்கியும் அணிந்துநின்றவர் இவைகளைப் புறக்கணித்து வேட்டிசால்வைகளோடு திருநீறு சந்தனம் அணிந்து சைவஆசாரத் தோற்றத்தோடும் பிள்ளைகள் ஆசிரியர்கள் மத்தியில் உலாவத்தொடங்கினர். இதனால் பிள்ளைகளும் ஆசிரியர்களும் சைவ ஆசாரத்தில் பெருவிருப்பும் மதிப்பும் அளித்தனர். இவ்வாறு ஆங்கிலநாகரிகப் பழக்கவழக்கங்களை விடுத்துச் சைவசமய நாகரிகப் பழக்கவழக்கங்களை மேற்கொண்டு, மனதைப் புலன்வழிவிடாது ஆளும் மனநீர்மையில் சிந்தையை நிறுத்தப் பெருஞ்சிந்தனை கொண்டார். இந்தச் சிந்தனைச் செல்வமே அவரின் ஆசிரியத்துவத்தின் செல்வாக்காகும்.

பெரியார் அவர்கள் தருக்கம், கணிதம்ஆகிய இருபாடங்களில் திறமை பெற்றிருந்த போதிலும் எல்லாப்பாடங்களையும் இலகுவாகக் கற்பிக்கக்கூடிய பாடவறிவில் பழுத்தவராவர். இந்தப் பழுத்த அறிவால் - கற்பிக்கும் செயற்றிறனால் மாணவர்கள் ஆசிரியர்கள் பயபக்தியோடு அடங்கி நடப்பர். அத்துடன் சைவநெறிக்குச் சிறப்பிலாத பழக்கங்களில் மாணவர்கள் நடப்பதை அவர்காணில் பிரம்பால் கண்ணோட்டமில்லாது அடிப்பார். இந்த அடிக்குப் பயந்து மாணவர்கள் அடங்கிக் கல்லூரியில் கல்விகற்பர். அவரிடம் கற்றவர்கள் அவரின் கற்பித்தலைக் கூறும்போது, ''அவர் ஒன்றைப்படிப்பித்தால் அவ்வளவும் மனதில் பதிந்துவிடும்'' என்பர். இது கற்பிக்கும்கால் தம் பிள்ளைகள் தம் மனத்தையும் புலனையும் அக் கற்பிக்கும் பொருளில் செலுத்தவேண்டும் என்பதில் அவர் மேற்கொண்ட கண்டிப்பினால் விளைந்ததென்க அக்கண்டிப்பு பிரம்படியென்க. படிப்பிக்குங்கால் வினாக்கேட்டு விடைசரியாகக் கூறவிட்டால் வேறுசிந்தனையில் இருந்தவர்என்று முடிபெடுத்துப் பிரம்பால் நல்லஅடி அடிப்பார். அடிவேண்டினாலும் அவரிடம் இருக்கும் பயபக்தியில் மாணவர்கள் இம்மியும் குறைவதில்லை. இப்படியான மாணவர்கள் இன்று அவரை வாழ்த்தி இன்புற்று வாழ்கின்றனர். ஏழை மாணவர்கள் என்றால் அவர்களின் கல்விவாழ்வில் பெரிதும் கண்காணிப்புடையவர். சைவநற்பழக்க பண்போடு கல்வியறிவில் திறமையான மாணவர்க்குப் பரிசில்களும் அளிப்பார். உளநூற்கல்வியில் நன்குதேர்ந்த

பெரியாராதலின் மாணவர்களின் மனநிலையை அறிந்து பயபக்தியாம் நெறியிற் செலுத்துவதில் வல்லவராயினர். உயிரோடு ஒட்டிய உள்ளத்தின் இனியசொற்கள் எத்தகைய துடியாட்டக்காரனையும் கற்பிக்கும் நேரத்தில் புலனமைதியோடு இருக்கச்செய்யும் என்பர். ''தாம்தம் தகுதியால் வென்றுவிடல்'' என்ற வள்ளுவனார் வாக்கிற்கேற்ப நம்பெரியார் மாணவர் உலகத்திலும் தம் ஆசிரியருலகத்திலும் நின்றாரெனில் மிகையாகாது. கல்லூரியில் கல்விநிகழ்ச்சிகள் தொடங்கினால் பராக்குப்பார்த்தல், வீண்வார்த்தை பேசுதல், நித்திரை தூங்குதல், வெளியேபோய்வருதல் என்பன ஆசிரியரிடத்திலாயினும் மாணவரிடத்திலாயினும் உண்டானதில்லை. உதைபந்தாட்டம், துடுப்பாட்டம் போன்ற மேலை விளையாட்டுக்களில் மாணவர்களை ஊக்கப்படுத்தமாட்டார். இதற்குப் பதிலாகக் கல்லூரிவளவில் பயிர்ச்செய்கை செய்யவும், பயனுள்ள அறிவுநூல்களை வாசிக்கவும், கோயில்வழிபாட்டு முறைகளில் உடலுழைப்புப் புரியவும் ஏவிவிடுவார். இத்தகைய பிள்ளைகளிடம் நம் பெரியாருக்கு அதிக விருப்பம்உண்டு. அத்துடன் பலியிடும்கோயில். தாசிகள்நடமிடுங்கோயில் எழுந்தருளிகளுக்குப் பொய்க்கால் கைகள்வைத்துச் சோடிப்பதுமான வேடிக்கைகள் மிகச்செய்யும்கோயில் போன்றவைகளை ஆலயங்களாகக் கொள்வதில்லை. தம்மிடம் விரும்பிக்கற்கும் மாணவர்களையும் அக்கோயில்களுக்குச் செல்லவும் விடுவதில்லை: அவ்வாறு மாணவர்கள் சென்றதைக்கண்டால் அல்லது அறிந்தால் அவர்களுக்கும் பிரம்பால் செங்கோல்நீதி செலுத்தாமல் விடுவதுமில்லை. அவ்வளவுக்குத் தம்மிடம்கற்கும் மாணவர்கள் நல்வழியை நாடவேண்டும் என்பதே அவரின் ஆசிரியத்துவமாகும். இன்னும் கல்லூரியிலும் விடுதிச்சாலையிலும் நாயன்மார் நால்வரின்பூசை, நவராத்திரிபூசை நிகழ்த்துவார். இதில் மாணிக்கவாசகர் குருபூசையைப் பெரிதாக ஊர்வலம்கொள்ளும் முறையில் நிகழ்த்தி ஆசிரியர், மாணவர், பெற்றோர் ஆகிய முத்திறத்தாருஞ் சைவநெறிக்கல்விக்கு எழுச்சியும் உணர்ச்சியும்உடையவராய் அமைதல்வேண்டும் என்று நியதிக்கு வழியாகக்கொள்வார். இவ்வாறு இவரின் ஆசிரியத்துவம் கல்லூரிக்குள் அமையாது வெளியேயும் பரந்து, மனிதசமுதாயத்தின் குற்றங்களைக் கெடுதல் உறச்செய்யும் ஆற்றலாக அமைந்தமையை ஆன்றோர்கள் எளிதில் உணர்ந்துகொள்வர்.

சிவத்திரு சு. சிவபாதசுந்தரனாரிடம் சிலர் தனிப்பட்டமுறையிலும் படித்துள்ளார்கள். அவ்வாறு படித்தவர் அவரின் ஆசிரியத்துவத்தைப்பற்றி எழுதியுள்ளனர். ''அவரிடம்--- ஐந்துநிமிடம் படித்தாலும் தலைகிறுகிறுக்கும். அவ்வளவுநேரமும் என்மூளைக்கு வேலை தருவார். தர்க்கசாஸ்திரம் அவரிடத்திற் படித்தேன். அடிப்படையான மூன்று விதிகளைமட்டும் சொல்லித் தந்தார். தர்க்கநூலைத்

திறந்து பார்க்காதேஎன்று சட்டமிட்டார். நான் திறந்துபார்க்க வில்லை. தர்க்கசாஸ்திரத்தின் நுணுக்கமான விரிவுகளையெல்லாம் அம்மூன்று விதிகளைக்கொண்டு என்னை அளக்கச் செய்துவிட்டார். யோசியாமல் அவருக்கு ஒரு மறுமொழியும் கூறமுடியாது. ஏன் அப் படிச் சொன்னுய் என்றுகேட்டால் திறுதிறு வென்றுதான் விழிக்க வேண்டும். ''வாயில்வந்தபடி பேசப்பழகாதே. எதையும் ஆராய்ந்து சொல்'' என்று எச்சரிப்பார். தாமும்மறுமொழி சொல்லித்தரார். தாம்கேட்கும் கேள்விகளுக்கு மறுமொழிகூறுவது கிடையாதென் பார். மறுமொழியை யோசியாமலிருப்பது எனக்குச் சங்கடம்தான் மறுமொழி வராவிட்டால் ஏதோஅதனேடு தொடர்புடைய பல கேள்விகளைக் கேட்டு மறுமொழி பெற்றுவிடுவார். இவ்வாறு பல கேள்விகளைக்கேட்டு மறுமொழிபெற்றுக் கல்விபுகட்டுதல் சோக்கிரத் தீசின் கல்விமுறை என்பர் ''என்று அபிமானிஎன்ற அவ்வெழுத் தாளர் எழுதியுள்ளார். கல்லுதல்மூலம் அறிவைப்பெறுதலே கல்வி என்பர். அதன்படி கேள்விகள்மூலம் கல்லுதலேக்கற்கும் மாணவனி டத்தில் தொழிற்படுத்தல் தனிமுறைக்கல்விக்கும்சரி, சமூகமுறைக் கல்விக்கும்சரி நேரியதொன்றும்;

மேலும், "அபிமானி'' என்ற அவ்வெழுத்தாளர் பெரியாரைப் பற்றி எழுதுங்கால் ''கிரேக்கநாட்டுத் தத்துவஞானிகளாகிய சோக் கிரத்தீஸ், பிளேற்ருே என்பவர்களிடத்தில் அவருக்கு அதிகமதிப்பு. பிளேற்ருே இயற்றிய ''குடியரசு'' என்னும்நூலை அவரிடம் படிக்க வேண்டி நேர்ந்தது. சனநாயககாலத்தில் சுதந்திரவுணர்ச்சி மிகுந் திருக்கும். ஆகையால் குதிரைகூட அவ்வுணர்ச்சி வயப்பட்டுப் பாதையில் நேராகஓடாதுஎன்று அக்காலத்தில் பிளேடோ எங்கள் சனநாயகத்தைப்பற்றிச் சோதிடம் கூறியிருக்கிருர். எதற்காக இப் படி பிளேற்ருே சொல்லுகிருர் என்று பிள்ளையவர்களை விசாரித் தேன்; ''ஏன் இக்காலத்தைப்பார், பெற்ருேர்களுக்கு மக்கள் மரி யாதை செலுத்துவதில்லை. ஆசிரியருக்கு மாணவர் மரியாதை காட்டு வதில்லை; இந்தவிபரீதம் எல்லாம் சனநாயக சுதந்திரத்தின் விளைவு என்ருர்: ''என்ருலும் ஒருசாரரரை ஏனையோர் அடக்கியாளச் சனநாயக முறையில் இடமில்லை'' என்ருர். ''சனநாயகத்தில் வாக் குரிமை எல்லோருக்கும் உண்டு'' என்றேன். ''அது குரங்கின்கைப் பூமாலை, படிப்பறிவில்லாதவர்கள் எப்படி அதனை உபயோகிப்பார் கள்?'' என்ருர்: அவர் கூறியதில் உண்மையைக் கண்டேன்'' என்று எழுதியுள்ளார். இதிலிருந்து குடும்பம் - சமூகம் - அரசு ஆதியன வற்றினைப்பற்றிய பெரியாரின் கருத்துச்சிந்தனை ஆசிரியத்துவத்தின் அதிஉயர்ந்த பண்பியலைக் காட்டுகின்ற தெனலாம்;

இவ்வாறான ஆசிரியத்துவத்தை முப்பத்தைந்து ஆண்டுகள்வரை நடாத்தியுள்ளார். இந்தவிக்டோரியாக் கல்லூரியை 1933ஆம் ஆண்டில் இறுதியாகக்கொண்டு இளைப்பாற்றுச் சம்பளம் எடுத்துக்கொண்டார்.

# இளைப்பாறலின் இன்ப நினைவுகள்.

## கந்தவனத் தபோவனம்:

விக்டோறியாக் கல்லூரியில் இருந்து இளைப்பாறியபின் நம் பெரியார் கந்தவனம் என்னும் சுப்பிரமணியக் கடவுளின் கோயிலின் பக்கத்தில் இருந்தார். இவர் இருந்தநிலம் அக்கோயிலின் நிலமாதலின் குத்தகைக்கு எடுத்திருந்தார், இதில் பெரியார் அவர்கள் குடிசை அமைத்திருந்தார். அவர் இருந்த குடிநிலம் தபோவனமாய் அமைந்தது எனலாம். ''தெருவில்நின்று பார்த்தால் இக்குடிசையின் உக்கிய பனையோலைக் கூரைதெரியும். வெளியில்உள்ள அதருக்கு மேல் ஒரு பனைமரப்பாலம். அதனைக்கடந்து ஒருசிறு ஒழுங்கையாற் செல்லவேண்டும். தட்டிப்படலை ஒன்று தென்படும். மேலேகொளுவிய கயிற்றை எடுத்துவிட்டுப் படலையைத் திறந்துகொண்டு உள்ளே சென்றால் அடர்ந்த சிறிய மாமரங்கள் கொத்துக் கொத்தாகத் தோன்றும் காய்களோடு உச்சிவெய்யிலிற் கூட நிழலைத்தரும். கவனம்! அம்மாங்காய்களில் ஒன்றையேனும் தொடப்படாது. அவர் மாம்பழம் சாப்பிடுவதுமில்லை. அவை கோயிற்சொத்து; ஒன்று தொட்டாலும் பெரும்பழி. எடுத்தவனுக்கும் பாவம், எடுக்கவிட்டவனுக்கும் பாவம்என்று பெருங்கதை வளர்த்துவிடுவார். அந்த மாமர நிழலிலே ஒரு சிறிய தென்னோலைப் பந்தல்; அந்தப்பந்தலில் ஒரு பக்கத்தே அடுப்புமூடப்பட்டிருக்கும்: வெந்நீர்வைப்பதற்கு இவ்வடுப்பு உபயோகப்படுவது போலும். அதிலே பாதரட்சையைக் கழற்றிவிட்டுக் குனிந்து உள்ளேசென்றால் சிரித்தமுகத்துடன், ஏன் இந்த வெய்யிலுக்குள் சொல்லாமல் வந்துவிட்டாய்'' என்றுவரவேற்பார். புறச்சாலையில் கல்விளிம்போடு கூடிய இருமண்திண்ணைகள்; ஒன்றில் பாயை விரித்துவிட்டு இருஎன்று சொல்லி இருத்துவார்.

மற்றத்திண்ணையில் பலகையாற் செய்யப்பட்ட ஓர்அறை. அதற்குள் ஒருமேசையுங் கதிரையும். மேசைக்கு அருகேயுள்ள சுவரில் சமயகுரவர் சந்தானகுரவர் நால்வருடைய படம் இருக்கிறது. அதற்குக் கீழே மேசையின் மீதேதான் ஆப்த நண்பராகிய சேர். பொன். இராமநாதனுடைய படம்ஒன்று இருக்கிறது. அம்மேசைக்

குப் பக்கத்திலே ஒருகட்டில். படுப்பதற்கல்ல, புத்தக ஆசிரியர்களால் அனுப்பப்பட்ட புத்தகங்கள் இருக்கும் இதுதான் அவரின் படிப்பறை,'' என்று பெரியாரின் தாபோவனக் குடிசையைப்பற்றி அபிமானி என்ற எழுத்தாளர் காட்டுஞ் சித்திரத்தைக் காண்க.

## சித்தாந்தநூலும் சிறந்த புகழுழைப்பும்:

இத்தகைய குடிசையின்கீழ் இருந்து தான்படித்த மேல்நாட்டுத் தத்துவ நூல்களின் குறைபாடுகளையும் சைவ சித்தாந்தத்தின் செழுங் கருத்துக்கள் சிறப்பாக அமையாத நீர்மையையும் எண்ணி இலண்டன் மாநகரில் தான்எழுதிய இந்துமதத்தில் சைவசித்தாந்தம் என்ற ஆங்கிலநூலை 1934ஆம் ஆண்டில் வெளியிடும் முயற்சியில் முனைந்து வெற்றிகண்டார். வெளிவந்ததும் இலண்டன் டைம்ஸ் புகழ்ந்தது. அமெரிக்காவில் நியோக் நகரில் வாழும்பிரபல வழக்கறிஞர் ''என்மனதை நிறைவுசெய்து அமைதியைத்தந்த இனியநூல் இது'' ஒருநூல் சொந்தமாக வைத்திருக்க விரும்புகின்றேன் என்று பாராட்டிக் கடிதம்எழுதவும் செய்தது.

இவ்வாறு இருக்கையில் திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் பரமேஸ்வராக் கல்லூரியின் சீரைச்செம்மைப்படுத்த மேலதிக அதிபராகக் கேட்டபோது அவர்சம்பளம் வேண்டாது கௌரவ அதிபராக இருந்து கடமையாற்றினர். பின்னர் கலாநிதி கு. சிவப்பிரகாசம் பண்டிதர் பயிற்சிப் பகுதிக்கு அதிபராக வந்ததும் சகலபொறுப்பையும் அவரிடம் விட்டுவிலகினர்.

## கந்தவனக் கடவைக் கோயில்:

1936ஆம் ஆண்டு கந்தவனக் கடவைக் கந்தன்கோயிலின் சீர்திருத்தம்நோக்கித் தன்பணத்தையும் பிறவற்றையும் தானம்செய்ய விரும்பினர். அங்கே சமயகுரவர் நால்வரின் திருஉருவச்சிலையை அமைத்தார். இதற்கும், முருகப்பெருமானுக்கும் பூசைசெய்ய ஆயிரத்து அறுநூறு ரூபாவை அறக்கட்டளையாக அமைத்து அதனை மேற்பார்வைசெய்ய திரு. பொ. கைலாசபதி, திரு. ச. சிதம்பரப்பிள்ளை, திரு. வே. நடராசா, திரு. சி. செல்லத்துரை, திரு. க. திருநாவுக்கரசு என்போரைக் குழுவினராக அமைத்து ஒருசாசனம் எழுதியிருந்தார். ஆனல் அவர் உயிரோடுஇருந்த காலத்திலேயே அவ் அறக்கட்டளை நடைபெற முடியாதபடி போயிற்று. இதனல் அப் பணம்பற்றிப் பெரிதும் சூழ்ந்து நினைந்துகொண்டிருந்தார்.

## திருக்கேதீஸ்வரக்கோயில்:

உடனே பெரியாருக்குத் திருக்கேதீஸ்வரக் கோயில் நினைவுக்கு வந்தது. உடனே அங்குச்சென்ருர். அங்குள்ளகுறைகளைக் கவனித்தார். ஒருவர் அங்கே போனுல் தங்குவதற்கு இடமில்லாதகுறை முதன்மையாகப் புலப்பட்டது. இதனுல் முதலியார் முத்துத்தம்பிப் பிள்ளை அவர்கள் உதவியால் இரண்டறை மடத்தைக் கட்டினுர். அதற்குத் திருஞானசம்பந்தர் மடம் எனப் பெயர்வைத்தார். இத் தலம் சிவன் தலமாயிற்றே; நடராசர்திருமூர்த்தம் இல்லையே இதனை யும் இங்கமைப்போம் என்று எண்ணினுர். எண்ணியவாறு அவ்வளவு எளிதாக நிறைவேற்ற முடியவில்லை. இதனுல் சேர் கந் தையாவைத்தியநாதனைப் பிடித்து அவரின் செல்வாக்கால் நடேசர் படிமத்தைத் தாபித்தார். நடேசர்கும்பாபிசேகம் நிகழும்காலத்தில் அவரின் உடல்நலமில்லாததால் அதைப்பார்வையிடும்படி பிறரொருவரிடம் சொல்லிவிட்டார். ஆனுல் அன்றிரவு அதிகதூக்கமில்லை. நான் வாக்குக்கொடுத்த நடேசப்பெருமானின் குடமுழுக்குக் காண முடியவில்லை என்றுல் இஃதென்ன வாழ்க்கை? இதென்னஉடம்பு? என்று அவர்மனம் அடிக்கடி அவரைஉறுத்தியது. சிவனடியார் திருநாவுக்கரசரை எண்ணியதும் மனம் மறுமலர்ச்சியுற்று வருத்தமெல்லாம் பஞ்சாய்ப் பறந்துவிட்டது. அடுத்த நாட்காலையே திருக்கேதீஸ்வரத்தான் திருமுன்நிலையின் நின்று அபிடேகம் கண்டுகளித்தார். இவ்வமைப்புக்களின் தொடர்பால் திருக்கேதீசரத் திருப்பணிச் சபையை உருவாக்கினுர். தாமே தலைவராக அமர்ந்து அச்சபையை இயக்கினுர். நம் சைவப்பெரியார் தன்னிடம் படித்துப் பெரியதொழில் நிலையில் செல்வம் செல்வாக்கோடு இருப்பவர்களிடம் கடிதத்தொடர்பு கொண்டு திருப்பணிவேலையை முடுக்கினுர். அவர்களும் அன்புடன்வரவேற்று கோயிலின் ஒருபகுதியைத் தங்களின்பொறுப்பில் விடும்படி கேட்டனர். பெரியாரும் பெரிதும் மகிழ்ந்து சபையோடு எண்ணுகையில் சபை அதற்கு இடம் அளிக்கவில்லை. இதனுல் சற்று மனஞ்சோர்ந்த நம் பெரியார் தலைமைப்பொறுப்பை ஒருவாறு பொறுத்துக் கொண்டிருக்கையில் நவக்கிரகம் ஆலயத்தின் அகத்தில் தாபிக்கக்கூடாது; இவ்வழக்கு பிற்காலவழக்கு என்று எதிர்ப்புக்கொடுத்தார்; சபையார் இதனையும் பொருட்படுத்தாது தாபித்தனர். உடனே பெரியார் சைவசமயத்தின் நெறிநோக்கித் அத்தலைமைப் பதவியை விடுத்துப் புறத்தே நின்ருர். இதன்பின்பே சேர்கந்தையா வைத்தியநாதன் அப்பதவிக்கு வந்தார். ஒட்டுசுட்டானில் குமரபுரத்தில் எழுந்தருளியிருக்கும் முருகன்திருவுருவைச் கற்சிலையாகவடித்துக் கொடுத்துமுள்ளார். இவ்வாறு கோயிற்சிந்தனையில் செழித்து மூழ்கியிருந்தார் என்க.

## இந்துமதவிசாரணைச் சபைமுன்:

நம் பெரியாருக்கு அரசியலில் இயற்கையில் ஆர்வமில்லை. இவரை அறியாவண்ணம் இவரைச் சைவமக்கள் தமதுதலைவராக மதித்து வந்தனர். 1930ஆம் ஆண்டு மாணவர் மாநாட்டில் தலைமைஏற்றுத் தனது தனித்துவமான சுதந்திரச் சிந்தனையுடன் பிற்கால வழக்கின் பிழைகளைஎல்லாம் எடுத்து விரிவுரைஆற்றிய எம் ஆன்றோனான சைவப்பெரியார் 1949ஆம் ஆண்டில் எழுந்த இந்துமத விசாரணைச் சபைக்கு மனம்மாறி முன்கூறிய கருத்துக்களுக்கு மாறான கருத்துக்களுக்கே முதன்மைகொடுத்து உரைசெய்தார். இதனால் இவர்மீது சிறிது அவநம்பிக்கையும் பொது மக்களிடத்து அரும்பியது. பொதுமக்களின் நல்விருத்தியுடன் தொடர்புடைய மிகமுக்கிய காரியங்களில் இவர் கூறிய எண்ணங்களை விசாரணைச்சபையினர் ஆராய்ந்து கண்டிக்க வேண்டியதாயிற்று. விசாரணைசபையார் தமது அறிக்கையை வெளியிடமுன்னரே அதைத் தமதுபார்வைக்கு அனுப்பும்படி அவர் சபைத்தலைவர் திரு. கே. கனகரத்தினம் வட்டுக்கோட்டைப் பிரதிநிதி அவர்களைக் கேட்டார். தலைவரும் அவர்வேண்டுகோளின்படி அதை அனுப்பினர். நம்பெரியாரும் அதனை வாசித்து அதில் உள்ள குறைகளை எடுத்துக் காட்டினார். தலைவர் கே. கே. அவர்களும் அவைமிக்க காத்திரமானவை என்று துணிந்துவேண்டிய திருத்தம் செய்தார், குறைகளைக்காட்டியதோடு பெரிதும் அறிக்கைதிருத்தித் தருவதாகத் திரு. கே. கனகரத்தினம் அவர்களையும் பாராட்டிக் கடிதமும் எழுதியுள்ளார்.

நிற்க; நம் சைவப் பெரியாரின் மனப்பாங்கைத் தெளிந்த மிக மிகப் பிற்போக்கு மக்கள் அவரைத் தலைவராக்கிப் பிரசாரம் செய்தனர். இதனைக் கே. கனகரத்தினம் கண்டித்துப் பத்திரிகைகளில் எழுதினார். இதனைக் கண்ணுற்ற நம் சைவப்பெரியார் அவருக்கு ஒருகடிதம் எழுதிய காலத்தில் ''மற்றையோர் அபிப்பிராயத்தைக் கேட்டு ஆராயத் தாம் என்றுந் தயாராக இருப்பதாகவும், தம்வழி பிழையென அறியின் அதைக் கைவிட என்றுந் தயாராக இருப்பதாகவும்'' என்று எழுதியிருந்தார். இவர் பின்னர் தன்னைக் கருவியாகக் கொண்டு தமது எண்ணங்களை நிறைவேற்ற முயன்ற பிற்போக்கு வாதிகளின் கபடப் போக்கினைக் கண்டபின்னர் இவர் அவர்களை விட்டுவிலக நேர்ந்தது. செனட்சபையில் நிறைவேறிய இந்து தேவாலயச் சட்ட நகல் திட்டத்தை இவர் முழுமனத்துடன் ஆதரித்தவர். அதில் சேர். ஒலிவர் குணத்திலகா அவர்கள் சைவப் பெரியாரைப் புகழ்ந்து உரை செய்துள்ளார். ''பெரியாரின் அனுபவத்துடன் கூடிய சுய எண்ணங்கள் நிதானமுடையனவாகவும் மிக விளக்கமுடையனவாகவும் இருந்தன. இவரை நேரே சந்தித்தூ

பேசியபோது தாம் அனேக உண்மைகளை அறிய நேர்ந்ததென்றும்'' வெளிப்படையாகக் கூறியுள்ளார். இவ்வாறு இந்துமதத்தின் சைவத் துறையில் சிறு ஈடாட்டம் பெரியார் அவர்கள் கொண்டது ஆண்டவனின் பணிப்பென்றே கூறவேண்டும். இதனை நம் அறிவியலால் அளக்க முடியாதென்பதே எமது எண்ணமாகும்.

## இந்தியச் செய்திகள்:

1941ஆம் ஆண்டு இவர் தலயாத்திரையாக இந்தியா சென்றுள்ளார். 1945 ஆம் ஆண்டில் பிச்சாண்டார் கோயில் பெருநிலக்கிழார் ஸ்ரீமத் இராசகோபாலபிள்ளையவர்களின் ''ஆனந்த விலாச'' மாளிகையில் சிலநாட்கள் தங்கியிருந்து அவர்களுக்குச் சிவஞான சித்தியார் பாடஞ் சொல்லி வந்தார். 1948 ஆம் ஆண்டில் தருமபுர ஆதீனத்தாரால் இவர் அழைக்கப்பட்டு அங்கே சில நாளும், சிதம்பரத்தில் சில நாளும் தங்கி நல்லசாமிப்பிள்ளையவர்களின் சிவஞான சித்தியார் ஆங்கில மொழிபெயர்ப்பைத் திருத்தியும் புதுப்பித்தும் அச்சிடுவித்தார். சிதம்பரத்தில் இவர் சேக்கிழார் மடத்தில் இருந்த ஞான்று நான் அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் பயின்றுகொண்டிருந்தேன். இவரைக் கண்டதும் இவரைப் பல்கலைக் கழகத்திற்கு அழைத்துச் சென்று ஈழநாட்டு இளைஞர் சங்கத்தில் பேராசிரியர் கா. சுப்பிரமணியபிள்ளை தலைமை வகிக்க ஒரு சிறந்த பேச்சு நடாத்தும் பாக்கியம் பெற்றேன். பேராசிரியர் திரு. கா. சு. அவர்கள் நம் பெரியாரிடத்து பேரன்புகாட்டி வழிவிடுத்தார்கள்.

''இலக்குமணபுரி''ப் பல்கலைக் கழகத்தில் மெய்ப்பொருளியல் பேராசிரியராகப் பணிபுரிந்த பரஞ்சோதி அம்மையார் சென்னைப் பல்கலைக் கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெறவேண்டி, 1938 இல். மெய் கண்ட சாத்திரங்களின் வாயிலாக அறியக் கிடக்கும் சைவசித்தாந்தம்'' என்னும் தலைப்பில் விரிவான ஆய்வுக் கட்டுரை தந்தார்கள். அப்பெரு நூலில் பேரறிஞர் சூரியநாராயண சாஸ்திரியார் தலைமையிலும் மேற்பார்வையிலும் எழுதப்பெற்ற கருத்துக்களைக் குறித்துள்ளார்கள். மேலும் சைவசித்தாந்தத்தை அத்வைதக் கண் கொண்டு பலபல குறைகள் கண்டார்கள். இதனைக் கண்ணுற்ற தருமபுரவாதீனத்து, சோமசுந்தரத் தம்பிரான் அவர்கள் இதற்குத் தகுந்த பதிலளிக்கக் கூடியவர் நம் சைவப்பெரியார் அவர்களே எனத்துணிந்து அவரை எழுதும்படி பணித்தார். நம் பெரியாரும் சிவஞான போதத்தின் செம்பொருளை ஆங்கிலத்தில் ஆணித்தரமாக எழுதிக் கொடுத்தார்கள். அம்மையாரின் ஐயங்களுக்கு விளக்கமாகவும், சில கருத்துக்களுக்கு மறுப்பாகவும் அந்நூலில் எழுதியுள்

ளார்; இந்நூலின் முற்பகுதி விடுபட்டுள்ளது 'சிவஞான போதச் சுருக்கம்' என்று பெயர்கொண்ட இந்நூல் ஐம்பத்தைந்து பக்கம் கொண்டது. 1950ல் இல் பெரியார் இதனை எழுதியுள்ளார். 1951 இல் சைவப்பிரகாச அச்சகத்தில் அடிக்கப்பட்டது.

நிற்க; பேராசிரியர் சி. நாராயணமேனன் என்பவர் விக்டோரியாவில் நம்பெரியார் அதிபராக இருந்த காலத்தில் அவரின்கீழ் ஆசிரியராக இருந்தவர். இவர் நம்பெரியார் இளைப்பாறிய செய்தி கேட்டு மாளவியா கட்டிய கல்லூரியில் உப அதிபராகவும், கணித—விஞ்ஞானப் பகுதிப் பீடாதிபதியாகவும் வரும்படி எழுதிக் கேட்ட செய்தியும் அவரின் இன்ப நினைவுகளில் ஒன்றாகும். அவ்வழைப்பைப் பெரியார் வயது மூப்பு நோக்கி ஏற்றுக் கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாம், 1952ஆம் ஆண்டில் திருப்பெருந்துறை, சிதம்பரம் போன்ற தலங்களுக்குப் போக அவர் எண்ணம் கொண்டிருந்தார். ஆனால் தேகநிலை இடந்தரவில்லை; அதனால் அவர் எண்ணம் கைகூடவில்லை.

## சில கருத்துரைகள்:

இவர் யாரும் தன்னைச் சிவனடியாராக நினைத்தல் கூடாதென்றும்; அவர்களின் நிலைக்கு ஆயிரம் பிறவிகள் நேர்ந்தாலும் அந்நிலை தனக்குக் கைவராதென்றும் நமக்கு எச்சரிக்கை செய்துள்ளார். நமது வைதிக சமயத்தை அண்மைக்கால மேல்நாட்டு விஞ்ஞானம் கொண்டு ஆராயமுற்படக் கூடாதென்றும்; அவ்வாறு செய்வோர் நரியின் வாலைக் கொண்டு கடலின் ஆழம் அறியமுற்படுபவர் போலாகும் என்றும் நமக்கு அறிவுறுத்தியுள்ளார். இன்று தெய்வ யந்திரங்கள் வைத்துப் பூசை செய்து அதனால் ஏற்படும் சில ஆற்றல்களில் நம் சைவப் பெரியாருக்கு அதிக நம்பிக்கையில்லை. எனினும் தந்தை தாயார்க்கு ஏற்ற மதிப்பளிக்கும் முகமாகவே வயிரவ, கோயிற் பூசை. யந்திர பூசைகளில் பங்கு கொள்வார். இன்னும் இவர் இறைவனிடம் அதைத்தருவாய், இதைத் தருவாய் என்று கடவுளை வணங்கும்போது கேட்கமாட்டார். புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடியென்மனத்தே வழுவாதிருக்க வரம் வேண்டும் என்பதே சைவப்பெரியாரின் தியானமாக அமைந்தது. இவர் இறப்பதற்கு ஒரு கிழமைக்கு முன் ''வேண்டத்தக்கது அறிவோய் நீ.........'' என்ற திருவாசகப் பாடலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அதன் பொருளையும் எழுதியுள்ளார். வேதத்தின் முதன்மையைக் கெடுக்க விரும்பாதவர். இவர் தினந்தோறும் காலை மாலையில் கோயில் வழிபாடு செய்யாமல் உணவு கொள்ளார்.

வெள்ளிக் கிழமை தோறும் உபவாசமிருப்பார். அன்று கல்லூரிப் பிள்ளைகளுக்குப் பிரம்பால் அடிக்கமாட்டார். 1920ஆம் ஆண்டு முதல் 1923 ஆண்டுவரை சமயம், சைவசமயம், சிவபெருமான், விரதம், சம்பந்தர், அப்பர், மணிவாசகர், சந்தாஞசாரியர் எனப் பெயரிய பல துண்டுப் பத்திரங்களைச் சென்னை சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்களைக் கொண்டு எழுதுவித்துத் தன்பொறுப்பாய் இலவச வெளி யீடுகள் செய்தவர். இவ்வாறு வைதிக தருமம் விளங்க வைதிக சைவசிகாமணியாய்த் துலங்கியவர்.

## இறுதி நிலை:

1953 ஆம் ஆண்டிலே சைவத்தின் மேன்மை என்ற ஆங்கில நூலை எழுதி அச்சில் பிழை திருத்தம் செய்துகொண்டிருக்கையில் இறையடி எண்ணி இவ்வுலகவாழ்வை நீக்கும்நிலை கிடைத்தது. இதுவே இவரின் இறுதிப் பணி. இவர் சாவின் வாசலை தட்டிநுழையும் சமயம் அவரின் மனைவி திலகவதியும் அவரின் பக்கலில் நின்ருர். அவ்வமயம் திரு. வி. நடராசாவும் நின்ருர். மாஸ்டர் விபூதியைப் பூசி ஸ்ரீ பஞ்சாட்சரத்தைக் காதில் ஓதுங்கள் என்ருர் பெரியாரின் மனைவி திலகவதியார். ஆசிரியரும் அவ்வாறே செய்தார்; ஆவி அகன்றது. இங்கே தன்னைமணந்து துறந்த பிரமச்சரியப் பண்பை இறுதி நிலையிலும் தனக்கும் அவருக்குமாகக் காத்து நின்ற திலகவதியாரின் ''படிசொற்கடவாத பாவாய்'' என நின்ற அழகு இனிதாய் நமக்குப் புலனுகின்றது. இன்னும், சைவப் பெரியாரின் திருநீறு அணிதலும் ஸ்ரீபஞ்சாட்சரம் ஓதலுமான சைவப்பணிக் குத் திரு. வி. நடராசன் மூலம் ஏவி உதவி புரிந்த அந்தப் பெண்ணுள்ளம் ''அன்புடையார்'' என்பதை எடுத்துக் காட் டுகின்ற தன்ருே. எப்படித் திருநாவுக்கரசரின் சைவப்பணிக்காகத் திலகவதியார் கைம்மை நோன்பு நோற்ருரோ அங்ஙனமே சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம் அவர்களின் சைவ வாழ்வுக்குத் அவர் மனைவி திலகவதியாரும் பிரமச்சரிய நோன்பு கொண்டு கற்பென் னும் திண்மைக்குரியவராஞர் என்க.

# எண்ணமும் எழுத்தும்.

## (நூல்கள்)

சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் அவர்கள் எழுதிய நூல்களையே நாம் எண்ணமும் எழுத்தும் என்று குறிப்பிட்டுள்ளோம். தாம் வாழ்ந்த காலத்துக் கல்வி யுலகத்திற்கும் சைவசமய வுலகத்திற்கும் தேவைகளைக் கணித்தே அவர் எழுதியுள்ளார். இதில் கற்போர், கற்பிப்போர் இருபாலாருக்கும் உவக்கும் உரிய நூல்களையே தேவையான அளவுக்கு எழுதியுள்ளார். அறிஞர்களுக்கோ ஆய்வாளர்களுக்கோ அமையும் நோக்கில் நூற்பணியைத் துவக்காது சிறுவர்களுக்கும் பொதுவான மக்களுக்குமான அறிவியல் முறையில் கருத்துக்களைத் தெளிவாகவும் அளவாகவும் அமைத்துள்ளார்: இதிலும் தமிழ் நன்கு அறிந்தவர்களுக்குத் தமிழ்மொழியிலும்: தமிழ் நன்கு அறியாதவர்களுக்கு ஆங்கில மொழியிலும் கல்வி சமயம் போன்ற பொருள்களில் எழுதிய பெருமை நம் பெரியாருக்கு உண்டு. கல்வி நோக்கில் அளவை நூல், அகநூல். படிப்பித்தலின் விதியும் முறையும், சமய நோக்கில் திருவருட்பயன், இந்துமதத்தில் சைவ சித்தாந்தம், சைவபோதம், போன்ற நூல்களைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இந்நூல்களையும் பிறவற்றையும் நாம் இனித் தனித்தனி நோக்குவாம்.

### அளவை நூல்.

அளவைநூல் 1953 ஆம் ஆண்டு சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது. இந்நூலுக்கு அப்பல்கலைக் கழகத்துத் தத்துவத்துறைத் தலைவர் திரு. ஆர். இராமாநுசாச்சாரியார் என்பவர் முகவுரை எழுதியுள்ளார். அதில் அவர், ''அறிவைப் பற்றிய ஆழ்ந்த ஆராய்ச்சியே தர்க்கம் எனப்படும், இதனை மனத்தின் மருந்தென்றும், விஞ்ஞானங்களுக்கு விஞ்ஞானம் என்றும், அறிவின் விளக்கென்றும் பலவகையில் அறிஞர் பாராட்டுவர்'' என்று பொதுவாக அளவைநூற் பெருமை கூறியுள்ளார்......................... ''மேல்நாட்டுத் தர்க்கநூல்கள் பிரமாண நிருபணத்தைத் தனியாக எடுத்து விளக்குகின்றன. மேலும் விஞ்ஞான வளர்ச்சியின் பயனாக நாளடைவில் பரிசோதனை முறைகளை அவை விரிவாகக் கூறத் தொடங்கின. இப்போது மேனாட்டுத் தர்க்கம் கணிதநூலின் முன்னேற்றத்துக் கேற்பக் கணிதரீதி தர்க்கம் சங்கேத தர்க்கம் என்ற துறையில் மிகமிக முன்னேற்றம் அடைந்துள்ளது. இது நுண்கணித வல்லோருக்கல்லது விளங்காது.'' என்று அளவைநூலின் பொதுவான வளர்ச்சி நிலையின் அருமைப் பாட்டையும் கூறியுள்ளார்..................ஆனால் மேனாட்டுத் தர்க்க நூல்களைத் தழுவிய தமிழ்நூல்கள் மிகச்சிலவே உள்ளன......................அவற்றுள் திரு. சு. சிவபாதசுந்தரம் அவர்கள் எழுதிய அளவைநூல் ஒன்றாகும். திரு. சு. சிவபாதசுந்தரனார் தர்க்க ஆராய்ச்சியில் வல்லவர்கள். பல்லாண்டுகள் ஆசிரியராக இருந்து தொண்டாற்றியவர்கள். அக

நூல், சைவசித்தாந்தம் முதலிய அரிய நூல்களை ஆக்கி உதவியவர்கள். இவர்களின் ஆற்றலுக்கேற்ப இவர்கள் இயற்றிய அளவை நூலும் எல்லாவகையிலும் சிறந்து விளங்குகிறது. இந்நூல் இனிய தெளிவான நடையில் அமைந்துள்ளது. ஆங்கிலத் தர்க்கச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்கள் அமைப்பது எளிதன்று, அப்பணியைத் திரு. சிவபாதசுந்தரனார் செம்மையாகச் செய்திருக்கிறார்கள். ..........கடினமான பொருள்களும் எளிதிற் புலப்படுமாறு சிறந்த எடுத்துக்காட்டுகள் சேர்க்கப் பெற்றிருப்பது போற்றுதற்குரியது. தெளிவுபடக் கூறுவதையே முக்கியமாகக் கருதிப்பொருளைக் குறைவுபடக் கூறும் இயல்பு இந்நூலில் இல்லையென்பது குறிப்பிடத்தக்கது'' என்று அப்பேராசிரியர் பெரியாரின் அளவைநூலின் அருமைகளைக் கூறுவதும் காண்க.

## அகநூல்.

அகநூல் என்ற இந்நூல் சென்னை, புரோகிரசிவ் அச்சுக்கூடத்தில் பதிப்புரிமை செய்யப்பட்டது. யுவவருடம் 1935 ஐப்பசி மீ 12 திகதியில் வெளிவந்துள்ளது. இந்நூலை அவர் தமது மாமியார் முறை பூண்ட தனக்குத் தமிழ்க்கல்வியூட்டிய தவச் செல்வியார் வ. பார்வதியம்மையார் திருவடிகளுக்குச் சாத்தியுள்ளார். *இந்நூல் 232 பக்கங்களை கொண்ட பதினைந்து அதிகாரங்களுடையது இந் நூலின் முகவுரையில் பெரியாரவர்கள் ''மேலைத் தேசத்தார் கண்ட அகநூற் கொள்கைகளைக் கூறும் விரிந்த நூல்கள் தமிழில் இன்மையாலும், அகநூற்பொருள் தமிழிலே சைவசாத்திரங்களிலே தத்துவப் பிரகரணத்திலே சுருக்கமாய்ச் சமய நூலுணர்ச்சியில்லாதார் அறிதற்கரிதாய்க் கூறப்பட்டிருந்தாலும் அப்பொருளை விரிவாயும் எளிதாயும் விளக்கும் ஒரு தமிழ்நூல் வேண்டப்படுகிறது. இதற்காக மேனாட்டுக் கொள்கைகளுட் சிறந்தவற்றை ஆதாரமாகக் கொண்டு இச்சிறு சுவடியை எழுதத் துணிந்தேன்'' என்று கூறியுள்ளார்.

மேலும் அவர் இந்நூலைப்பற்றிக் கூறுவதாவது; இந்நூற் பொருள் முதலதிகாரத்தில் தொகுத்தும், மற்றையவற்றில் வகுத்துங் கூறப்படுகின்றது. மனிதனுடைய மூவகையாற்றல்களாகிய அறிவு, தொழில் இச்சைகளுள்; இச்சை இரண்டாம் மூன்றும் நான்காம் அதிகாரங்களினும், தொழில் அடுத்த ஐந்ததிகாரங்களிலும், அறிவு பின்வரும் ஐந்ததிகாரங்களிலும், இவற்றின் தொகுதியாகிய தன்மை பதினைந்தாமதிகாரத்திலும் விளக்கப்படுகின்றன என்று நூல் விளக்கம் தந்துள்ளார்.

இத்தகுவான மனிதரினியல்பைக் கூறும் இந்நூலை மீண்டும் புதுப்பித்து பெற்றோர்களும், ஆசிரியர்களும் கற்று எதிர்கால சந்ததியர்களாக விளங்கும் சிறுவர்களை நாம் செம்மையுறப்படுத்தல் வேண்டும். இந்த அடிப்படை நோக்கிலேயே நம் சைவப்பெரியார் அவர்கள் தம் அறிவாற்றல்களைச் செலுத்திய செம்மைப் பாட்டை நாம் மறக்காது புதுமையுறல் வேண்டும்.

## சைவக் கிரியை விளக்கம்.

சைவக்கிரியை விளக்கம் என்ற இந்நூல் விபவ ஆண்டு 1928 ஆவணி மாதம் யாழ்ப்பாண சைவபரிபாலன சபையாரால் வெளி வந்துள்ளது. இந்நூல் முகவுரையில் நம் பெரியார், ''எமது அறிவு தொழிலிச்சைகளை நல்வழிப்படுத்தலே சைவக் கிரியையின் நோக்கம். சைவக் கிரியைகள் பொறி புந்திகளைச் சிவநெறியிற் செலுத்தும், கிரியைகட் குயிராகிய மந்திரமும் பாவனையும் இவற்றைச் சிவமய மாக்கும். மந்திர சத்தியின் அளவு மனமொழிகட் கப்பாற்பட்டது. ஆயினும் அதன் பயன் அதை யுபாசிக்கு மளவுக்குத் தக்கதாகப் பெறப்படும். சிவோகம் பாவனையும் கருடபாவனையும் பெரும் பயன் பயத்தலும் சண்டீசராற் சிவலிங்கமாகப் பாவிக்கப்பட்ட மணற்குவியல் பேரருள் சுரத்தலும் பாவனையின் ஆற்றலையும் பாவனையும் மந்திரமும் ஒன்றற்கொன்று இன்றியமையாமையும் உணர்த்தும் என்று பொதுவிளக்கம் தருகின்றார்.

மேலும் அவர், ''கிரியை செய்யுங்கால் அதிலே மனப்பதிவும் அன்பும் அத்தியாவசியகமாம். இவற்றைப் பெறுதற்கு அதன் தன்மையும் நோக்கமும் கிரியை செய்வோனுக்குப் புலப்படல் வேண்டுமாதலால், இவற்றை விளக்கும் ஒரு நூல் வேண்டப்படுகிறது.'' என்று கூறி, அந்நூலின் இயல்முறையை விளக்குவான் வேண்டி, ''கிரியைகளை விளங்குவதற்குச் சைவசமயவுணர்ச்சி வேண்டுமாதலால் இந்நூலின் முதலியல் ''சைவசமயவியல்'' ஆயிற்று. சில கிரியைப் பகுதிகள் பலகிரியைகளில் வருதலால், ஒவ்வொரு கிரியைப் பகுதியையும் ஒவ்வொரு கிரியையினும் விளக்காது ''கிரியையுறுப்பியல்'' என்று இரண்டாமியலிற் தனித்தனியே கூறப்பட்டன. பின்பு, பூர்வக் கிரியைகளாகிய தீட்சையும் விவாகமும்; தனக்கும் பிறர்க்கும் உரியதாகிய சிவாலயபூசாதிகளும் அபரக் கிரியையும் முறையே நான்கியல்களிற் கூறப்பட்டன'' என்று கூறியுள்ளார். இவ்வாறு சைவசமயம், கிரியையுறுப்பு, தீட்சை, விவாகம், கோயில், அபரக் கிரியை என்று ஆறுஇயல்கள் எண்பது பக்கங்களில் அடக்கமுற எழுதி ஆகமவிளக்கம் செய்யும் அருமைப்பாடென்னே!.

## படிப்பிக்கும் முறைகளும் விதிகளும்.

அக நூலாசிரியராகிய நம் சைவப் பெரியார் படிப்பிக்கும் முறைகளும் விதிகளும் என்றதோர் நூலைப் பிரமாதி ஆண்டு (1919) மாசி மாதத்தில் எழுதி முடித்து வெளிப்படுத்தியுள்ளார். இந்நூல் சென்னை சாந்தி அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டுள்ளது. இந்நூல் பிரவேசம், கற்றல், கற்பித்தல், அடக்கம், காட்டல், கருதுவித்தல், உரைத்தல், அப்பியாசம், பரீட்சித்தல், பள்ளிக்கூட நிர்மாணம், வகுப்புப்பாடப் பொழுதுமுறை, அறக்கல்வி, பாடீகணிதம், வீச கணிதம், கேத்திர கணிதம், வாசிப்பும் இலக்கியமும், எழுத்தும் இலக்கணமும், சரித்திரம், பூமிசாத்திரம், என்ற பத்தொன்பது அதிகாரங்களையுடையதாயும், அநுபந்தமாக பாலரக நூல், விவேகப் பரீட்சை, ஆரம்ப விஞ்ஞானசாத்திர மாதிரிப் பாடக் குறிப்புகள் என்பவைகளோடும் முந்நூற்று நாற்பத்தொரு பக்கங்களை உடையதாகும்.

இந்நூலின் முகவுரையில் பெரியார் ''இந்நூல் தமிழாசிரியருக்கும் ஆசிரியர் கலாசாலையிற் கற்போருக்கும் பயன்படுமாறு எழுதப்பட்டது. படிப்பிக்கும் முறைகளேயன்றி மாணாக்கர் படிக்கும் முறையும் (அதி-2) தலைமையாசிரியர் பள்ளிக்கூடத்தை நடத்தும் முறையும் (அதி-10) இதிலே கூறப்பட்டுள்ளன. படிப்பிக்கும் முறைகளுட் பொதுமுறைகள் ஒன்பது அதிகாரங்களிலும் (1, 2,-9, 11) சிறப்பு முறைகள் எட்டதிகாரங்களிலும் விளக்கப்படுகின்றன'' என்று எழுதியுள்ளார். இவ்வாறு தாம் வாழ்ந்த காலத்தில் கல்வியுலகின் தேவைகளை எண்ணித் தன்கடனை நிறைவேற்றிய செம்மைப் பாட்டைத் தமிழுலகம் மறக்கலாமோ?

# சைவ போதம்-1

சைவபோதம் முதற்புத்தகம் கதைரூபமாகச் சைவப் பெரியார் சு. சி. அவர்களால் அமைக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து அவருக்கு இதிகாச புராணங்களில் உள்ள அறிவியலான நம்பிக்கை நமக்குப் புலனாகின்றது. ''இதிலுள்ள கதைகள் பெரும்பாலும் பழமையானவை. வட மொழியிலுள்ள முதனூற் கதைகளுக்கும் தென் மொழியிலுள்ள வழிநூற் கதைகளுக்கும் இடையிடையே வேறுபாடுகள் இருத்தலைக் கண்டு இதிலுள்ள கதைகள் சில அவற்றினின்றும் வேறுபடுதலை ஆன்றோர் பொறுப்பர்'' என்று அவர் எழுதுவதிலிருந்து தமிழர்-ஆரியர் பண்பாட்டு வேற்றுமையைத் தெளிந்துள்ளமையும், அவைகளைச் சிந்திக்கும் மாணவர்களின் மனோதத்துவ வியலுக்குக்

கேற்ற சிறு மாற்றம் பெரியார் செய்தமையையும் நாம் கண்டு கொள்ளலாம். சிவபெருமானது திருவருளையும், சிவனடியார்களது திட பத்தியையும், புண்ணியமான செயல்களையும் விளக்கும் கதைகள் மூலம் கடவுளிலே உள்ள பற்றை வளர்க்கலாம் என்ற நோக்கில் இந்நூலைக் கதைரூபமாக எழுதியுள்ளார்.

இந்நூல் நூற்றிருபத்தெட்டுப் பக்கங்களையுடையது. முப்பத்து மூன்று பொருளடக்கம் கொண்டது. உபாத்தியாயர்களுக்கு அறிவிப்பு என்று இந்நூலைச் சிறுவர்களுக்கு எப்படிக் கற்பிக்க வேண்டும் முறையையும் எழுதியுள்ளார். இந்நூலுக்குச் சேர். பொன். இராமநாத துரை K T, K. C ஒரு பாயிரம் எழுதியுள்ளார். அப்பாயிரம் இந்நூலில் உள்ள கதையின் பொருளடக்கத்தைப் பருநிலைப்படுத்திக் காட்டும் அழகில் அமைந்துள்ளது. ''இந்நூல் சிவபெருமான் ஆன்ம கோடிகளை எவ்விதம் இரட்சித்து வருகிறாரென்று விளக்குகிறது...... அவரது (கடவுள்) இலக்கணங்களையும் சநாதன தர்மங்களையும் எடுத்துக் கூறுதலரிதாயினும் அவற்றில் சில இந்நூலிற் பின்வருமாறு விளக்கப்பட்டன:

1. கடவுள் அன்பு நிறைந்தவர் (பாடம்: 1, 6)
2. கடவுள் எங்குமுள்ளவர் (பா, 1, 4)
3. கடவுள் உயிர்க்கு உயிராயுள்ளவர் (பா, 13)
4. கடவுள் அடியார்க்கு எளியவர் (பா, 2, 4)
5. கடவுள் ஆன்மாவை என்றுங் காக்கிறார், உடம்பு அழிவுக்கு உரியபொருள் (பா. 13)
6. கடவுளை நம்பினோர்க்கு ஒரு குறையுமில்லை (பா. 1, 9, 15)
7. கடவுள் வழிபாடு அவசியம் வேண்டற்பாலது (7, 10, 12, 13)
8. கடவுள் வழிபாட்டினாலே பழவினைப்பயனை வெல்லலாம் (பா. 7)
9. கடவுள் வழிபாடே உபவாச விரதத்தின் முக்கிய அங்கம் (பா. 20)
10. அகந்தை, மமதை, துஷ்ட நினைவுகள், விஷய சுகபோகங்கள், அநித்திய வஸ்துவிலுள்ள பற்றுக்கள் ஆகிய மலங்கள் யாவற்றையும் சிவபெருமான் நீக்குபவராதலால் அந்த அநுக்கிரகத்தை உணர்த்தும் திருநீறு வணங்கப்படத்தக்கது '(பா. 10, 11)
11. திருக்கோயிலிலே தொண்டு செய்தல் தாசமார்க்கத்தாருக்கும் பெரும்புண்ணிய கருமம் (பா. 10, 12)
12. ஆன்மலாப முயற்சியிலே சரீர வருத்தஞ் சற்றேனும் நினைக்கப் படத்தக்கதன்று (பா. 6, 8)

13. அநித்தியப் பொருளுக்காகச் சமயத்தை விடலாகாது (பா. 23) தாயும் பிள்ளையும், தந்தையும் பிள்ளையும், உபாத்தியாயரும் மாணவனும், பதியும் பத்தினியும், ஆகிய சம்பந்தங்களிலே தாய் தந்தை உபாத்தியாயர் பதி ஆகிய இவர்கள் அன்பே சொரூபமாயும் அறிவே சொரூபமாயும் இருத்தலினால் இவர்கள் வழிபடத்தக்கவர்கள்.

14. தாயை வழிபடல் (பா. 14, 16)

15. தந்தையை வழிபடல் (பா. 16)

16. உபாத்தியாயரை வழிபடல் (பா. 24)

17. பதியை வழிபடல் (பா. 24)

18. சீவகாருண்யத்தை அபிவிருத்தி செய்தல் வேண்டும் (பா. 1, 18, 32)

19. தீங்கு செய்கிறவர்களுக்கும் நன்மை செய்தல் வேண்டும் (பா. 11, 13, 32)

20. தனக்கு வருந்துன்பங்களைப் பாராட்டாமல் பொறுத்துக் கொள்ளுதல் ''தபஸ்'' என்னும் பெருங்குணம் (பா. 19)

21. அகந்தை, மமதை அற்ற தன்மை உத்தம குணம், இதுவே தாழ்மை (பா. 21)

22. பழிப்பன பகரேல் (பா. 20)

23. மதுபானம் சரீரத்தையும் நல்லொழுக்கத்தையும் கெடுக்கும் (பா. 24, 25)

24. நேர்மையாக இருத்தல் வேண்டும் (பா. 19, 27, 29, 30)

25. திருநீற்றை அவமதித்தால் தீமை உண்டாம் (பா. 26, 27)

26. பிற உயிர்களுக்குத் துன்பஞ் செய்யலாகாது (பா. 28, 29)

27. மிருகபலி பெரும்பாதகம் (28, 29)

28. நமக்கு அதிகாரம் வந்த காலத்திலே நமது இலாபத்தைக் கருதாமற் பிறருடைய நன்மையையே கருதல் வேண்டும் (பா. 31)

29. பிறருக்காக நாம் வருந்தல் வேண்டும் (பா. 22)

என்று காட்டியதிலிருந்து கடுகளவு சிறிய கதையாயினும் பனையளவுப் பொருள்களைக் கொண்டதென்பதைத் தெட்டத்தெளிவாய் அறிகின்றோம். இவ்வாறான அருமை பெருமையான நூலை நம் சிறுவர்கள் இதுபோது கற்காமல் இருப்பது துரதிர்ஷ்டமாகும். இதனைக் கல்வி அதிகாரிகள் சிந்தனை செய்வாராக.

## சைவபோதம்-2

“சிவபெருமானுடைய திருவருளினின்றுந் தோன்றிய வேதாகமங்களும், அவற்றின் வழி நூலாகிய மெய்கண்ட சாத்திரம் முதலிய நூல்களும் பதி, பசு, பாச இலக்கணங்களைக் குறைவற எடுத்துக் காட்டுகின்றன. இவற்றுள் முதனூல்கள் வடமொழியில் இருத்தலாலும் வழிநூல்கள் இலக்கிய இலக்கண தர்க்க நூல்களின் அறிவை வேண்டுவன வாதலாலும் இவைகளைக் கற்றுக் கொள்ளுதல் சிறுவர்களுக்கும் இங்கிலிஷ் பாஷையே அதிகமாகக் கற்ற மற்றையோர்க்கும் மிக அரிது. இவர்களுக்குப் பயன்படத்தக்கனவாய் எளிதான நடையில் நூல்கள் எழுதப்படாமையால் அவற்றின் இன்றியமையாமையை உணர்ந்து கவலையுற்று ……………… சிவபெருமானுடைய திருவருளை முன்னிட்டு ஆசையினால் இந்நூலை எழுதத்துணிந்தேன் என்று இந்நூல் எழுந்த நோக்கத்தைப் பெரியார் அவர்கள் முகவுரையில் எடுத்துக் காட்டியுள்ளார்.

இந்நூல் சிவஞான சித்தியாருடன் வேதப்பிரமாணங்களும் கொண்டுள்ளது. மந்திரங்களின் மெய்ப்பொருள் தமிழிற் காட்டப்பட்டது. நாவலர் பெருமானின் இரண்டாம் சைவ வினாவிடையிலிருந்து சில அதிகாரப் பகுதிகள் எடுத்துப்பேசப்பட்டுள்ளன. இந்நூல் சைவசமயம், உயிரின்நிலைமை, பாசங்கள், ஆன்மா, பதி, முப்பொருள்கள், சிவபெருமானின் மூர்த்தங்கள், சைவசாதனங்கள், சிவாலயதரிசனம், நித்தியகருமம், கடவுள் வழிபாடு, அறம் என்ற பன்னிரண்டு அதிகார முறைகளைக் கொண்டது. இந்நூல் 1915ஆம் ஆண்டாகிய நள வருடத்தில் அச்சிடப்பட்டது. [அறம் என்ற பகுதியில் சைவப் பெரியார் சு. சி. அவர்களின் புலாலுண்ணாமை என்ற பகுதி என்மனத்தை மிகப் பிணித்துள்ளது]

## சைவபோதம்-3

திருவருட்பயன் என்ற உமாபதிசிவாச்சாரியார் எழுதிய நூலையே சைவபோதம் மூன்றும் நூலாகச் சைவப்பெரியார் கொண்டுள்ளார். அவ்வாறு அவர் அமைத்ததின் நோக்கம் இரண்டாம் சைவபோதத்தின் பொருளடக்கத்தை நோக்குவார்க்கு எளிதில் புலனாகும். இரண்டாம் சைவபோதம் திருவருட்பயனின் சுருக்கம் என்றே கூறிவிடலாம்.

திருவருட்பயன் என்ற நூலை 1918ஆம் ஆண்டுஆகிய காலயுத்திவருடம் ஆனி மாதம் எழுதி நிறைவேற்றியுள்ளார். அதன் சிறிய முக

வுரையில் பெரியாரவர்கள் ''இதிலுள்ள பதவுரை நிரம்பவழகிய தேசிகரது பொழிப்புரையைத் தழுவியும், விசேடவுரை சிவஞான போதம், சிவஞானசித்தியார் முதலிய சித்தாந்த சாத்திரங்களையும் அவற்றின் பேருரைகளையுந் துணையாகக் கொண்டும் எழுதப்பட்டன. அத்தியாவசியக மல்லாதவை கீழ்க்குறிப்புக்களாக எழுதப்பட்டன.'' ............... என்று எழுதியுள்ளார்,

## திருப்பெருவடிவம்.

திருப் பெருவடிவம் என்பது சுப்பிரமணியப் பெருமானுடைய வடிவத்தைக் குறித்ததாகும். இது கந்தபுராணம் சூரபன்மன் வதைப் படலத்து நானூற்றிருபதாம் பாடல் தொடக்கம் நானூற்று ஐம்பத் தொன்றாவது பாடல் வரையும் உள்ள கருத்துச் செய்திக்கு நம் பெரியார் அவர்கள் கொடுத்த விளக்க விரிவுரையாகும். ஒரு சமய இலக்கிய நூலுக்கு ஓர் உரைவிளக்கம் எப்படிச் செய்ய வேண்டும் என்பதற்கு இந்நூல் ஓர் எடுத்துக் காட்டாகும். சில உதாரணங் கள் தருவோம்:-

### 1. காப்புச் செய்யுளில்:

''குமாரக் கடவுள் செலுத்திய அம்புகள் தெய்வங்களாதலால் [இதைத் தெவ்வடு பகழியென்னுந் தேவிர்காள்'' என்பதனுல் அறிக. (சூரன்-வதை. பட : 4 18)] சூரனுடைய மாயாரூபங்களை அழித்த பின்பு அவைகள் அவர்பால் மீண்டு வந்தன.

''குமாரக் கடவுள் தாங்கிய வேலானது ஏனையோரது வேல் போலாகாதுஞானவடிவினதாயிருத்தலால்''தனிவேல்''என்றார்; ஞானசக்தியாகிய வேலைத்தரித்தலால் குமாரக் கடவுளுக்கு ஞானசத்திதரர்'' என்ற திருநாமமுண்டு. ஏனையசத்திகளாகிய இச்சாசத்தியும் கிரியாசத்தியும் முறையே வள்ளி நாயகியும் தெய்வநாயகியுமாம். ஆகவே சுப்பிரமணிய மூர்த்தமானது குமாரக்கடவுள் தெய்வநாயகி வள்ளிநாயகி வேலாயுதம் ஆகிய நான்கு திருவடிவங்கள் பொருந்தியுள்ள விரிவான மூர்த்தமாம். விரிவான மூர்த்தங்கள் சரியாமார்க்கத்தில் உள்ளவர்களுடைய வழிபாட்டிற்குப் பொருத்தமானவை.

### 2. 15ஆம் செய்யுளில்:

''குமாரக் கடவுளுடைய பெருமைகள் வீரவாகு தேவரால் அவை புகுபடலத்திலும், சிங்கமுகாசுரனுல் அமைச்சியற் படலத்

திலும் சொல்லப்பட்டன. இப்படலங்களும் சூரபன்மன் வதைப் படலத்து இப்பாகமும் கந்தபுராணத்தின் முக்கண்கள் எனப் பாராட்டப் படத்தக்கவை. இம்மூன்றையுங் கல்லாதவர் வறிய ரில் வறியர், இவற்றைக் கற்றவர் செல்வருட் செல்வர்.

20 செய்யுள்:

குமாரக் கடவுளின் திருவடிகளோவெனில் தூய்மையும் நன்மை யும் பொருந்திய அழகையுடையவை. தூய்மையாவது ஆன் மாக்களின் மலபந்தங்களை நீக்கி அவைகளைச் சுத்தராக்கும் இயல்பு. நன்மையாவது அவைகளுக்குப் பேரின்பத்தைக் கொடுத் தல். சூரபன்மனுடைய கண்கள் அத்திருப்பெரு வடிவத்தில் திருவடிகளிலேயன்றி வேறெதிலாயினும் சென்றதாகத் தெரிய வில்லை. இத்திருப்பெருவடிவடிவத்தின் பெருமையை அவன் முன் கூறிய (16-ம்) திருவிருத்தத்திலே தனக்குரிய அண்டங்கள் யாவும் பதரோமம் ஒன்றின் நுனியிலே நின்றதைக் கண்டேன் என்றான். திருவடி வடிவத்தின் அழகைக் கூறும் திருவிருத்தத் திலும் திருப்பாதத்தின் அழகையே கூறுகின்றான். அன்பர்கள் ஈசனுடைய திருவடிகளை அடைதலையே நோக்கமாயுடையவ ராதலால் அவர்களுடைய மனம் அவற்றையேயென்றும் நாடு தல் இயல்பு.........

இவ்வாறு சைவ சாத்திரத்தை இம்மியும் தராத சொற்களையோ சொற்பொருள்களையே தராத புலமையை இங்குக் காண்க. இந் நூல் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் தமது அச்சகத்தில் விரோதி (1938) வருடம் வைகாசி மாதத்தில் வெளி யிடப்பட்டுள்ளது.

## கந்தபுராணவிளக்கம்.

கந்தபுராண விளக்கம் என்ற நூல் கொழும்பு விவேகானந்த சபையாரால் கொழும்பு மெய்கண்டான் அச்சகத்தில் அச்சடிக்கப் பட்டு வெளிவந்துள்ளது. "இந்நூல் சுப்பிரமணிய தொண்டரும் எனது முன்னறித் தெய்வமும் ஆகிய தந்தையாரது திருவடிச் சேவையாக இயற்றப்பட்டது" என்று எழுதிய நோக்கத்தை நமக் குத் தெரிவிக்கின்றார்.

கந்தபுராண விளக்கத்திற்கு ஒரு முன்னுரை சைவப் பெரியார் எழுதியுள்ளார். அதில், ''கந்தபுராணம் வடமொழியிலுள்ள ஸ்காந்த மாபுராணத்தின் ஒரு பகுதியாம். ஸ்காந்த புராணம் சனற்குமார சங்கிதை, பிரம சங்கிதை, விட்டுணு சங்கிதை, சங்கர சங்கிதை, சூரசங்கிதை என ஆறு சங்கிதைகளையுடையது. ..........இவற்றுள் சங்கர சங்கிதை பன்னிரண்டு காண்டங்களையுடையது. முதற்காண்டமாகிய சிவரகசிய காண்டம் பதின்மூவாயிரங் கிரந்தமுடைய தாய்ச் சம்பவ (உற்பத்தி) காண்டம். அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவகாண்டம், தட்ச காண்டம், உபதேச காண்டம் என ஏழு கண்டங்களையுடையது. இவற்றுள் முதல் ஆறு காண்டத்தையும் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள் மொழிபெயர்த்துக் கந்த புராணம் என்னும் பெயரிய இந்நூலைப் பாடியருளினர்.

இது பொருளாலும் அகலத்தாலும் தமிழ் நூல்கள் யாவற்றினும் சிறந்தது. பெருங்காப்பிய இலக்கணங்கள் யாவும் பொருந்தியது. அறம், பொருள், இன்பம் வீடாகிய நான்கையும் விளக்கி அவற்றைப் பெறும் வழியையுஞ் சாதனத்தையுங் காட்டுவது. சிவதருமோத்திரங் கூறும் அறங்களை நிலை நிறுத்துவது. பாரதம் முதலியவற்றைப் போலச் சரித்திரங்களையும் கூறுவது. பெரிய புராணத்தை ஒப்பச் சிவபெருமானது திருவருட் சிறப்பையும், அடியாரது அன்புத் திறத்தையுங் கூறுவது. தோத்திர நூல்களாகிய தேவாரம் திருவாசகங்களைப் போலப் பொருளிலக்கணத்துக்கு இலக்கியமாக ஆன்மா ஈடேற்ற முறையை ஒருங்கே கூறுவது. சாத்திர நூலாகிய சிவஞான சித்தியாரைப் போற் சைவசமய வுண்மையை நாட்டிப் புறச்சமயங்களைக் கண்டிப்பது. ஆயினும் தவத்தின் சிறப்பையும் சிவ உபாசனையின் பெருமையையும், சிவநிந்தையின் கொடுமையையும் உயிர்கள் முத்திபெறும் முறைமையையும் விளக்குதலே முதல் நோக்கமாகக் கொண்டது. .........

.........ஒரு குழந்தை கிணற்றடிக்குப் போய்த் தவறிக் கிணற்றில் வீழ்ந்திறந்தது என்று அக்குழந்தைக்குச் சொல்லுதல் பயனுடைத்தாம். ஆசிரியர் அறிவூட்டும் முறைமை இதுவே. சிவநிந்தனையால் வரும் தீமை தக்கனது யாகத்தாலும், மகளிரை விரும்பல் காசிபன் புலம்பலாலும் இந்திரன் வருந்தியதாலும், பெரியோரைப் பிழைத்தல் வில்லவன் வாதாபிப் படலத்தாலும் விளக்கப்பட்டன. சைவ சித்தாந்த வாய்மைகள் காசிபன் உபதேசத்திலும், சிவபிரானது அருட்செயற் றெளிவு ததீசி யுத்தரத்திலும், துறவற இல்லறச்

சிறப்புக்கள் மார்க்கண்டேயப் படலத்திலும், பொருட் பெருமை மாயையுபதேசத்திலும் ஆசிரியர் காட்டியருளினர். உலகாயுதம், மாயாவாதம், மீமாம்சம், வைணவம் ஆகிய சமயங்களின் இழிவை இந்திரபுரி, சுக்கிரனுபதேசம், ததீசியுத்தரம்' திருக்குற்றாலம் ஆகிய படலங்களில் ஆசிரியர் பெரும்பாலுஞ் செயலினுல் விளக்கியருளினர்' வள்ளியம்மை திருமணப் படலத்தில் முத்திநெறியை நன்றாக காட்டியருளினர்.

இங்ஙனம் இந்நூலின் விளக்கத்திற்கு ஒரு நுழைவாயில் அதில் தரப்பட்டுள்ளது. இவ்வாறு நூலின் திட்பநுட்பம் எளிமை நீர்மையில் எழுதும் இயல்பு எல்லாம் அவருக்கே உரிய பாங்காகும்.

## இந்துமதத்தில் சைவசித்தாந்தம்.

## THE SAIVA SCHOOL OF HINDUISM

இந்து மதத்தில் சைவசித்தாந்தம் என்ற ஆங்கிலநூல் சிவஞான போதம் சிவஞானசித்தியார் என்பவைகளைப் பெரும்பாலும் அடிப் படையாக வைத்து எழுதப்பட்டது. இது பதினைந்து அதிகாரங் களையும் இரண்டு அநுபந்தங்களையும் கொண்டு நீள் சதுரவடிவில் நூற்றெண்பத்தொன்பது பக்கங்களைக் கொண்டது. இதில் முதலதி காரம் மதம் பற்றியும், இரண்டாம் அதிகாரம் சமயம் பற்றியும். மூன்றுமதிகாரம் சைவசமயத்தின் சுருக்கம் பற்றியும் ஏனைய ஏழு அதிகாரங்கள் மேற்கூறியவைகளை விரித்துக்கூறுகின்றன. கன்மத் தைப்பற்றிப் பிழையான கருத்தை நீக்குவதற்கு உரியவிளக்கமும் இந்நூலுள் தரப்பட்டுள்ளது. பதினொன்றாவது அதிகாரம் துவக்கம் பதினைந்தாவது அதிகாரம்வரையும் வழிபாட்டு முறைகளைப் பற்றிய விளக்கம் எழுதப்பட்டுள்ளது.

1934 ஆம் ஆண்டில் ''அலன் அன்வின்'' என்னும் இலண்டனில் உள்ள பிரசுரநிலையத்தாரால் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. கல்விமானும், அரசியல்ஞானியும், முனிவராய்த் திகழ்ந்த சேர். பொன். இராமநாதன் அவர்களுக்கு இது காணிக்கை யாக்கப்பட்டுள்ளது.

இந்த நூலுக்குக் ''கார்டிவ்வு'' பல்கலைக்கழகக் கல்லூரியின் முன்னைநாள் பேராசிரியரும், கீழைத்தேயக் கல்வித்துறையில் பண்ணுட்டுப் புகழ்பெற்றவருமாகிய ''மக்கென்சி'' என்பார் ஓர் அணிந்துரை வழங்கியுள்ளார். அவர் தன்னுடை அணிந்துரையில் கூறியவை:

''சில ஆண்டுகளுக்கு முன் இலங்கை, இராமநாதன் கல்லூரியில் நான் தங்கியிருந்தபோது இந்த நூலாசிரியரைச் சந்திக்கும் இன்பத்தைப் பெற்றேன் ஆங்கில வாசகர்களுக்கு இந்தநூலை அறிமுகம் செய்யும் வகையில் சில வார்த்தைகள் அணிந்துரையாக எழுதும்படி அவர் என்னைக் கேட்டுக் கொண்டார். அந்த வகையில் அதிகம் இந்நூலுக்கு எழுதவேண்டும் போலத் தெரியவில்லை. ''நறுந்தேறலுக்கு விளம்பரம் தேவையில்லை; எனினும் மிகச் சிறந்த நறுந்தேறல்களிலும் நறும்மணத்தில் சற்று வேறுபாடு உளவாறு போலவே நல்ல மெய்ப்பொருட் கோட்பாடும் எந்த நாட்டில் தோன்றுகின்றதோ அந்த நாட்டின் பண்பாம் நறுமணத்தைத் தாங்கித் தன் தனித்துவத்திற்காக வேறுபட்டுச் சிறந்து விளங்கி வரும் .. ..........
........இந்து மதத்தில் சைவசித்தாந்தம் என்னும் பொருளை இந்த நூல் மிகவும் தெளிவாக எடுத்து இயம்புகின்றது. இந்நூல் முக்கியமாக அறக்கோட்பாடுடையது. இந்த நூலில் சிறப்பான அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்கள் மேலைநாட்டு வாசகர்களுக்கு முன் படித்த பழக்கம் இல்லாததாக இருக்கலாம். இந்தப் பழக்கமின்மை கூட ஒருவாய்ப்பு என்றே கூறவேண்டும்............ ஆங்கில வாசகர்கள் கீழை நாட்டின் தனித்தன்மையான எண்ணப் போக்கை அறிவதற்கு ஆங்கில வாசகர்கள் முயற்சி செய்ய வேண்டும் என்பது சிறப்பாக விரும்பத்தக்கது. கீழைத்தேயக் கருத்து வெளிப்பாடுகளுடன் எமது மேலைநாட்டுச் சிந்தனைகளுக்கும் சிறப்பான பிணிப்புண்டு. எனவே இந்த நூலைத் தவிர எனக்குத் தெரிந்த வேறு எந்த நூலாவதும் விரும்பத்தக்க இந்த இலக்கை அடைவதற்கு உதவும் என்று எனக்குத் தெரியாது. அறக்கோட்பாட்டைச் சிந்தனை, அஃதும் சிறப்பாக இந்தியச் சிந்தனை பற்றிய ஆர்வமுடைய எல்லோர்க்கும் இந்த நூலை மிகுந்த மனவார்வத்துடன் விதந்து பரிந்து உரைக்கின்றேன்.

# சைவத்தின் மேன்மை.

## GLORIES OF SHAIVAISM

சைவத்தின் மேன்மை என்ற நூல் 1954ஆம் ஆண்டு யாழ்ப்பாணம், சைவ பரிபாலன சபையாரால் வெளிவந்துள்ளது. சைவ சமயம், சைவசமய நூல்கள், திருநீறு, வழிபாடு, வழிபாட்டுத்தலங்கள், பஞ்சாட்சரம், சைவவாழ்க்கை முறை, பாமரர்சைவம் என்ற பொருளடக்கங்களைக் கொண்டு அறுபத்தைந்து பக்கங்களைக்கொண்ட ஓர் ஆங்கில நூல். இந்நூல் நம் சைவப்பெரியார் வாயாற்

அணுக்க மாணவனாகிய திரு. V. நடராசா என்பவர் எழுதப்பட்டது. இவ் எழுத்து முறை 1953ஆம் ஆண்டில் தொடங்கியது. இவர் இந்நூலை எழுதுங்கால் திரு. தணிகாசலம், திரு. க. சிவப்பிரகாசம் என்பவர்களுடன் எழுதிய முறையைப்பற்றி விவாதித்து எழுதிய தொன்றாகும்.

இந்நூல் அச்சாகி வெளிவருவதற்கு முன் அவர் சிவபதம் அடைந்தபடியால், கலாநிதி க. சிவப்பிரகாசம் என்பவர் அரியதோர் முகவுரை ஒன்று எழுதியுள்ளார். அதில் அவர் இந்நூலைப்பற்றிக் கூறுங்கால், ''முதலாம் அதிகாரம் சைவதத்துவத்தைச் சுருக்கமாகக் கூற, ஏனைய அதிகாரங்கள் இயல்பாகவே பொதுவறிவு நிரம்பிய மக்கள் விளங்கி அதன்வழி ஒழுகிச் சிவபதம் அடைவதற்கு உதவுவதாய் அமைந்துள்ளன. பரமுத்தி என்பதைப் பற்றியும், பலவித மான வழிபாட்டு முறையைப் பற்றியுங் கூறும் கருத்துக்கள், இவருடைய தனி உரிமைக் கருத்துக்களாம்.'' இன்னும் அவர் மேலும் கூறுவதாவது; ''பல கடினமான சைவநூல்களை வாசித்தறிய வேண்டிய ஆர்வநிலையில்லாமல், இந்த ஒரு நூல் மூலமாக அந்நூற் கருத்துக்கள் முழுவதையும் இலகுவில் விளங்கத்தக்கதாக இந்நூல் இலங்குகின்றது'' என்று கூறுவதும் ஓர்க.

# கொள்கைகளும் கோட்பாடுகளும்.

## [உரைகள்]

சைவப்பெரியார் திரு. சு. சி. அவர்களின் கொள்கைகளும் கோட்பாடுகளும் என்று நாம் எழுதும்போது இலங்கை அரசாங்கம் கல்வி, சமயம் என்ற இரண்டு விடயங்களில் தம் மக்களின் எண்ணக் கருத்தைத் திரட்டும் ஆய்வுக் குழுவின் செய்தியை மனத்தில் உட்கொள்ளுகின்றோம். பெரியாரின் வாழ்வியலில் கல்வியும் சமயமும் ஆழ்ந்து புதைந்த பொருள்களாகும். இப்பொருளை ஒட்டித் தாம் வாழ்ந்த காலச் சமுக-அரசியல் நிலைகளுக்குத் தக்கவாறு பண்டைய இந்திய மக்களின் அறிவியியல் முடிவுகளை உறைபொருளாகக் கொண்டு வெளிப்படுத்திய எண்ணக் குவியல்களையே ஈண்டு நாம் கொள்கைகளும் கோட்பாடுகளும் என்கிறோம். கொள்கை என்பது தனியியல் மிகுங்கருத்தாம். கோட்பாடு என்பது இனவியல் மிகுங் கருத்தாம். ஒரு கல்விமான் ஓர் எண்ணத்தைக் காலம் - இடம் நோக்கித் தனியே தனிநிலையிலும், தனியே இனநிலையிலும், தனியே இரண்டும் மருவிய பொதுநிலையிலும் வெளிப்படுத்துவான். இந்த முத்திறநிலையிலும் அந்த ஓர் எண்ணத்தின் வெளிப்பாடு ஒரு சீராக

அமையமாட்டாதென்பதை யாவரும் அறிவர். இதனால் அவ் ஒரெண்ணக் கருத்து முரண்நிலைப்படுவது போல் புலனாகும். ஆனால் அஃது அவ்வாறன்று. அறிவியலின் இயல்நிலையதாகும். இந்த விளக்கத்தின் படியே திரு. சு. சிவபாதசுந்தரனாரின் எண்ணங்குவியல்களை நாம் விளங்க முனைய வேண்டும்.

## சமய நோக்கில் :

இலங்கை அரசாங்கம் அவர்காலத்தில் இந்துமத அறநிலையங்களின் சொத்துப் பரிபாலனம், ஆலயங்களில் பலியிடுதல், வழிபாட்டுச் சுதந்திரம் என்பன தொடர்பாகச் சீர்திருத்தச் சட்டம் இயற்ற வேண்டும் என்ற சிலரின் கோரிக்கையைப் பரவலாக ஆய்வு செய்ய ஒரு சபை அமைந்தது. அச்சபையில் நம் பெரியாரில்லை. அவர் புறத்தேயிருந்து முரணித் தன் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் வெளிப்படுத்தியுள்ளார், ஆனால் கல்விச் சீர்திருத்தக் குழுவில் அதன் அகத்தே இருந்து கொண்டு அதனொடு முரணித் தமது எண்ணக்குவியல்களைத் தெரிவித்துள்ளார். இவ்விரு சபைகளும் அவருக்கென்று ஒரு தனித்துவமான இடத்தைக் கொடுத்துப் பெருமை படுத்தியதை அவ்வறிக்கைகளை நோக்குவார் நன்கு உணர்வர். சமயசீர்திருத்த அறிக்கை 1951ஆம் ஆண்டுக்குரியது. அவற்றில் சிலவற்றை எடுத்துக் காட்டி அவரின் சமய நோக்கை அறிவோம்.

## அறநிலைய சொத்துப் பரிபாலனம் :

யாழ்ப்பாணத்தில் உள்ள கோவில்களிற் பல இச்சட்டத்தினால் வரும் செலவினைச் சுமக்கவோ, கணக்குகள் காட்டவோ முடியாதன. செலவுக்குத் தக்க வருமானம் இல்லாத ஆலயங்கள் பல இப்படியான கோவில்களில் முகாமைக்காரர் பணம் அபகரிப்பதற்கு இடமேயில்லை. செலவுக்கு மிஞ்சிய வருவாயுள்ள கோவில்கள் யாழ்ப்பாணத்தில் மூன்று அல்லது நான்கு தான் இருக்கின்றன. ஆகவே இதற்கென ஒரு சட்டம் இயற்றுவது பொருந்துமா? அதிக பயன் ஏற்படுமா?.......... கோவில்களைக் கட்டுப்படுத்தி மேற்பார்வை செய்தற்கான ஒரு தாபனத்துக்குரிய செலவுப்பகுதியை இறுக்க முடியாத எத்தனையோ ஆலயங்கள் இங்கே உள. கோவில்களே கொடுக்க வேண்டாம், அரசாங்கமே இதற்கான செலவைக் கொடுக்க வேண்டும் என்று கேட்பதும் அரசாங்கம் அவ்வாறு செய்வதும் கொள்கையளவிற் பிழை'' ............... முறைப்பாடுகளைக் கேட்டு அவற்றுக்கான பரிகாரம் தேடுவதுடன் மாத்திரம் சட்டம் இருந்தால், தான் அதற்கு மாறில்லை எனவும், ஆனால் குறித்த சட்டத்தின்படி அமைக்கப்படும் எச்சபையினதும் தீர்ப்பை ஆட்சேபித்து

மனுச்செய்ய இடம் சட்டத்திலே இருக்க வேண்டும் எனவும் திரு. சு. சிவபாதசுந்தரம் ஒரு வினாவிற்கு விடையளித்த போது கூறியுள்ளதாக அறிக்கை தெரிவிக்கிறது. (இந்து – அறிக்கை : 55, 56)

## உயிர்ப்பலி:

உயிர்க் கொலை புரிவதைச் சைவசமயம் தடுக்கிறது உண்மையே ……… இப்படியான கொலை பாதகத்துக்கு அவர்கள் கர்மத்தினால் தண்டிக்கப்படுவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.''

இவ்வழக்கத்தை ஒழிக்க வேண்டுமெனச் சைவசமயிகள் பொதுவாக நினைத்தால் அதனை இணக்க முறையில் செய்ய வேண்டும். இந்த இணக்க முறையினால் இப்போது பல ஆலயங்கள் பலியிடும் வழக்கத்தை நிறுத்திக் கொண்டன. …………… இப்படிப்பட்டவர்களுக்கு நாம் அறிவுறுத்த வேண்டும், உண்மையினை உள்ள உள்ளவாறு உணரச் செய்ய வேண்டும். இவ்வழக்கத்தை ஒழிப்பதற்குச் சட்டம் கொண்டுவரப்படுதலை நான் ஆதரிக்கமாட்டேன். சட்டம் கொண்டு வருவது ஒருவரது சமய அநுட்டானத்தில் தலையிடுவது போலாகும். கோவில்களிலே உயிர்ப்பலியை ஒழிப்பதற்கு மிக உக்கிரமாகப் பிரசாரம் செய்தவர்களில் நானும் ஒருவன். இப்போதும் இவ்வழக்கத்துக்கு நான் விரோதி; ஆனால் இவ்விடயத்திலே அரசாங்கம் தலையிட்டு, சட்டத்தைப் பிறப்பித்து அதன் மூலம் இப்பலியிடும் வழக்கத்தை ஒழிக்க முன்வருமானால் அதனைத் தடுப்பதில் எனது உயிரைத்தானும் தியாகம் செய்யப் பின் நிற்கமாட்டேன்

(இந்து – அறிக்கை : 59)

''மாமிசபோசனம், உயிர்களைப் பலியிடுதல் விடயமாகச் சொல்லுமிடத்து, சாயனராலும் அவர் போன்றோராலும் தான், இவை வேதங்களில் இடம்பெற்றன. சாயனர் போல்வார் செய்த வியாக்கியானம் எவ்வளவு பிழையானது என்பதைச் சுவாமி தயானந்த சரஸ்வதி நன்கு காட்டியிருக்கிறார். அது மாத்திரமல்ல, வேதங்கள் மாமிசபோசனத்தைக் கண்டித்திருக்கின்றன, என்பதையும் சுவாமி தயானந்தர் ஆணித்தரமாக ஐயந்திரிபுக்கு இடமில்லாமல் நிரூபித்திருக்கிறார். சாயன வியாக்கியானத்தின்படி அசுவமேத யாகத்துக்குரிய குதிரையைக் கொல்லுவதில்லை, எவ்வித ஊறும் செய்யாது அவிழ்த்து விட்டு விடுவார்கள்''

(இந்து – அறி : 225 பக்)

## வழிபாட்டுச் சுதந்திரம் :

''எனக்குத் தெரிந்த வரையில் ஆலயங்களில் வழிபாட்டுச் சுதந்திரம் பூரணமாக இருக்கிறது. எந்த எந்த இடத்தில் நின்று எந்த வகுப்பு மக்கள் வழிபட வேண்டுமென்பதில்தான் இப்பொழுது அபிப்பிராய பேதம் ஏற்பட்டிருக்கிறது. இன்னாரின்னார் இன்ன இன்ன இடத்தில் நின்று வணங்க வேண்டும் என சுப்பிரபோத ஆகமம் தெளிவாக விதித்திருக்கிறது. ஆகம விதிகளை மாற்றும் அதிகாரம் எவருக்குமில்லை. அப்படி இல்லை, நாம் இவ்விதிகளை மீறத்தான் போகிறோம் என்றால் அது வேறு விஷயம். ஆனால் இன்னாரின்னார் இன்ன இன்ன இடத்தில் நின்று கொண்டே வழிபடவேண்டும் என ஆகமங்கள் விதித்திருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை.

உயிர்ப்பலியாக கோவிற்பிரவேசமாக சரியா பிழையா என்று நான் எனது மகஜரில் தெரிவிக்கவில்லை என்பதை நீங்கள் அவதானிப்பீர்கள் எவ்விஷயத்திலாவது ஒரு தீர்ப்புச் சொல்ல நான் விரும்பவில்லை. நடுநிலைமை வகிக்கவே விரும்பினேன் ...... இது ஒரு சமயப் பிரச்சனை; இதிலே அரசாங்கம் தலையிடக்கூடாது; சட்டம் இயற்றக்கூடாது என்பதுதான் எனது கொள்கை. (இந்து - அறி : 61)

ஆனால் 1930 ஆம் ஆண்டு 1948 ஆண்டுகளில் நம் சைவப்பெரியாரின் மேற்குறித்த கருத்துக்களை ஆங்கில இந்து சாதனம் வெளிப்படுத்தியுள்ளது.

## அவற்றுள் சில காட்டுவாம்:

1930ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் மாணவர் மகாநாட்டில் செய்த சொற்பொழிவில்:-....... சாதி, சமாசனம் என்பவைபற்றிக் கூறுங்கால் ''வேதங்களில் ஒரேயொரு சூத்திரத்தின் மூலமாக இச்சாதியின் கருத்தை நன்கு விளக்கலாம். அச் சூத்திரத்தின் கருத்து இது தான்:- உலகில் உள்ள பல்வேறு வகுப்பு மக்களை தேகத்தில் உள்ள பலவித உறுப்புக்களுடன் ஒப்பிடலாம். பிராமணனைத் தலைக்கும், சத்திரியனைக் கைகளுக்கும் வைசிகனை வயிற்றுக்கும், சூத்திரனைக் கால்களுக்கும் ஒப்பிடலாம். வர்ணாசிரம தர்மத்தின் கருத்து இதுதான். சரீரத்தின் ஏனைய உறுப்புக்கள் எப்படி இயங்க வேண்டும் என்பதைச் சிரம்தான் வகுக்கிறது. அதேபோலச் சமூகத்தின் உள்ள சகலரும் இயங்குவதற்கான சமய விதிகளைப் பிராமணன் உண்டாக்குகின்றான். தேகத்திற்கு ஏதும் ஆபத்து நேருவதைக் கைகள் தடுத்துப் பாதுகாக்கின்றன, அதே போலச் சத்திரியனும் சமுதாயத்தைப் பாதுகாத்தான். வேண்டிய உணவைப் பெற்று அதன் சத்தைத்

தேகத்தின் பல பாகங்களுக்கும் செறியச் செய்வது வயிறு, இது போல இருந்தவன் வைசியன்; சாதி என்பது தொழில் பிரிவினையை ஆதாரமாகக் கொண்டே வந்தது.

''குறித்த ஒரு சாதியின் ஒழுக்க விதிகளில் இருந்தும் பிறழ்ந்தும் ஒதுக்கப்பட்டவர்கள் தான் இன்று தீண்டாதார் எனப்படுவோராக இந்து சமுதாயத்தில் இருக்கின்றார்கள். வர்ணாசிரம தர்மத்தில் தீண்டாமை என்ற ஒன்று இருக்கவேயில்லை. சமாசன மறுப்பு போன்ற தீமைகள் விதிக்கப்படுவதற்குப் பழைய சமய நூல்களில் ஆதாரமேயில்லை. இப்படியான தீமைகள் இருப்பதற்கு நியாயமும் இல்லை. தீண்டாமை என்பது அந்நியர் படையெடுப்புக்களுடன் – அநேகமாக மேல் நாட்டு அடிமை வியாபார முறையுடன் வந்திருக்க வேண்டும்.'' (இந்து.- அறி: 226 பக்கம்)

''பிறப்பினை ஒட்டி மாத்திரமல்ல, ஒழுக்கத்தினையும் ஒட்டியே சாதி உளது என்பதை நான் இப்போது அறிகிறேன். கூடாவொழுக்கம் மனிதனைச் சாதியினின்றும் வீழ்த்திவிடும் என்பது தெளிவு. ஆகவே ஆகம விதிகளை மீறுமலேயே நல்லொழுக்கம் உள்ள வகுப்பினர் கோவிலுக்குப் போகலாம்'' (இந்து - அறி : 227 பக்கம்) இக் கருத்து 1948ஆம் ஆண்டில் வெளிப்படுத்தப்பட்டது. இவ்வாறு நம் சைவப் பெரியாரின் சமய நோக்கில் கொள்கைகளும் கோட்பாடுகளும் தேர்க. இதிலிருந்து சிறப்பாக நாம் தெரிந்து கொள்வது சமயதத்துவங்கள் தமது தனிநிலையில் இருந்து சமூகத்தில் செறியும் போது உளதாம் தாக்கத்திலும் பார்க்க, ஆட்சியில் அவைகள் செறியும் போது உளதாம் தாக்கம் மிகப் பெரியதென்பதாம். இந்தப் பெரிய தாக்கத்திலிருந்து தவிர்த்துக் கொள்வது ஒரு சமயி என்பவனின் கடமை என்பதேயாம்.

முழுஉரிமைநிலையான சுதந்தர அரசும் சமய நிகழ்வுகளில் தலையிடுதலைப் பெரிதும் விரும்பாத நம் பெரியார்; வேற்று மொழியும், சமயமும், பழக்க வழக்கப் பண்பாடு உடைய ஓர் அரசு தலையிடுதலை எவ்வாறு பொறுப்பார்! அவ்வாறு அது தலையிட நாம் வாளாவிருப்போமாயின், வெறும் உலகியற் சீவன்களாகச் சடசீவன்களாகச் சிறுமைப்பட்டு விடுவோம் என்பதே அவர் கருத்தாம். இச் சிறுமையின் கீழ்மைக் கொடுமையை நேர்மையான சமயியாக நம் பெரியார் இருந்த படியாலேயே குழுவின் முன், நீங்கள் எடுத்துக் கொண்ட விடயங்கள் உண்மையில் நிவிர்த்தி செய்ய வேண்டிய குறைபாடுகளாக இருந்தாலும் அரசு சக்தியால் அதுவும் வேற்றரசின் சக்தியால் நீக்கப்படுவதைத் தடுக்க எனது உயிரைத் தானும் தியாகம் செய்யப் பின் நிற்கமாட்டேன் என்று வஞ்சினம் உரைத்தார் என்க. இன்னும் இவரின் தீர்க்கதரிசனமான மற்றொரு எண்ணம் பலிச்சென்று புலனாகின்

றது. இலங்கையானது சுதந்திரம் பெற்றாலும் தமிழரின் நிலை சமநிலைப் படாத சுதந்திரமாகவே இருக்கும்; வேற்றுமத இனமக்களின் அரசே தலைதூக்கும்; ஆகவே இன்றும், நாளையும் அரசின் தலையீடு சமயத்திற்கு அழிவைத் தரும் என்று எண்ணித் துணிந்ததே அத் தீர்க்கதரிசனமாம்.

## புலாலுண்ணாமை:

நம் பெரியார் கடவுள் உயிர்களுக்கு உரிய கன்மத்திற்கேற்ப மாமிசஞ்சாப்பிடத் தக்க சரீரம், தாவரம் சாப்பிடத்தக்க சரீரம், இரண்டையும் சாப்பிடத் தக்க சரீரம் என்ற மூன்று வகையான அமைப்புடைய சரீரங்களை அளித்துள்ளார். அதில் மனிதனின் சரீரம் தாவர உணவுக்குரியது என்று மனிதனின் பல்லு, நாக்கு, குடல் என்பவைகளைப்பற்றி விளக்கம் தந்துள்ளார். மேலும் அவர் கூறுவது: ''மாமிச உணவு வேண்டுமானால் நம்மைப்போல் அறிவுள்ள உயிர்களைக் கொன்றே பெறவேண்டும். அஃது எவ்வளவு பெரும்பழி, ஆன்மாக்கள் ஈடேறுதற்காகவுள்ள உடம்பை அழிப்பது போலப் பெரும் பாதகம் வேறென்ன இருக்கிறது? சிலர், நாம் ஆசையால் அவைகளைக் கொல்லவில்லையே' என்றால், நமக்காக அவை பிறராற் கொல்லப்படுதலால் நாமே அக்கொலைக்குக் காரணர். ஆதலால் அந்தப் பாவம் பழியற் பெரும்பகுதி நமக்கேயாம்......... மேலும் அவர் கூறியதாவது; ''ஒருமீனை அல்லது கோழியைக் கொல்லும்போது அஃது எவ்வளவு பாடுபடுகிறது! நமக்கு ஒரு முள் ளுத்தைத்தால் நாம் எவ்வளவு வருந்துகின்றோம். நம்மை வெட்டினால் நமக்கு எப்படியிருக்கும்? அது போலத்தானே அதற்கும் இருக்கும் ......... ''எல்லா உயிர்களுங் கடவுளுடைய குழந்தைகள்; ஆதலால் நாம் கடவுளுக்காக எல்லா உயிர்களிடத்து அன்பு வைத்து அவைகளுக்கு நன்மை செய்ய வேண்டும். நன்மை செய்யா விட்டாலும் தீமை செய்யா மலாவது இருத்தல் வேண்டும் ......... ''கடவுளுடைய விதிக்கு (தாவரபோசன உடம்புக்கு) மாறாக நாம் மாமிசம் புசித்தால், கன்மமலமும் ஏறும். இந்தப் பிறவியில் அதிகம் வருந்தாவிட்டாலும் நரகத்திலே அளவில்லாத காலம் வருந்துவது நிச்சயம். பின்னர் இழிவான மிருகங்களாய்ப் பிறந்து வருந்திப் பின்பு மனிதராகப் பிறக்கும் போதும் குருடர், செவிடர், பெருவியாதி, கயரோகம் முதலிய பெருநோய்களாற் பீடிக்கப்பட்டு வருந்துவதும் நிச்சயம் .........

என்று அவர் தெருட்டியுள்ளார். எனவே நாம் உயிர் நீத்த மாமிசமான பிணத்தைத் தின்னும் மனிதமிருகங்களாக வாழாது மனிதனாக வாழ நாம் விருப்பம் கொள்வோமாக.

## கல்வி நோக்கில்:

1940 ஆம் ஆண்டில் இலங்கை அரசு கல்விஆய்வுக் குழு வொன்றை நியமித்தது. அந்தச் சிறப்புக் குழுவில் நம் சைவப்பெரியார் திரு. சு. சிவபாதசுந்தரனார் அவர்களும் இடம் பெற்றார். இதில் இவர் அறிவுறுத்திய கருத்துக்களையே இவர் கல்வியின் தனித்துவமான கருத்துக்களாக நாம் நேரலாம். இக்குழுவுக்குத் தலைவராகக் கலாநிதி C. W W. கன்னங்கரா என்ற கல்வி அமைச்சர் இருந்தார். செயலாளராகத் திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை C. C. S. அவர்கள் கடமை புரிந்தார்.

ஆய்வுக்குழுவில் அக்காலத்தில் கல்விமான்கள் என்று கணித்துப் புகழப்பட்ட பலர் உள்ளடக்கியிருந்தனர். தமிழர்களைச் சார்ந்த வகையில் நம் சைவப் பெரியாரோடு திரு. சு. நடேசன், திரு. என். நடராசா, கே. சி; அதிபர் யே. சி. அமரசிங்கம் என்போர் இடம் பெற்றனர். அக்காலக் கல்விப் போக்குப் பற்றி மிகவும் ஆழ்ந்த சீர்திருத்தக் கருத்துக்களை அடிக்கடி தம்மைத் தரிசிக்கும் கல்வியதிகாரிகளுடன் வெளியிடப்பட்டமையாலேயே நம் பெரியாருக்கும் இப்பதவி வழங்கப்பட்டதெனலாம். இக்குழுவின் அறிக்கை ஈழத்துக் கல்வி வரலாற்றை மாற்றியமைத்தது என்று சரித்திரவாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த அறிக்கை இருபத்தொரு அதிகாரங்களையுடையது. இதனில் கல்விக் குறைபாடு, பாடசாலை நிருவாகம், கற்பிக்கும் மொழி, பொதுக்கல்வி, தொழில் நுட்பக்கல்வி, போன்ற மிக முக்கியமான அதிகாரங்கள் இடம் பெற்றன. இந்த அறிக்கை உருவாகுவதற்குச் சைவப் பெரியாரின் திறமை பெரிதும் பயன்பட்டதென்பது தெளிவு, அத்துடன்; தம்முடைய தனித்துவமான கருத்தைக் காட்டும் வகையில் மேலதிக விதப்புரை ஒன்றையும் அவர் தீட்டியுள்ளார். இந்த விதப்புரையும், கல்விக்கட்டுப்பாடு, தொடக்க நிலைக்குப்பின் வருகின்ற கல்வி, ஆசிரியர்களை வழங்கல், ஆசிரியர் சம்பளம், கல்வி நிர்வாதம், கல்வி உள்ளடக்கம் என்ற ஆறு பகுப்புக்களைக் கொண்டதாம். இந்த ஆறு பகுப்புக்களில் அடங்கியுள்ள பொதுவான சிறப்புக்கருத்துக்களைத் தருவாம்,

எதிர்காலத்தில் பாடசாலைகள் எல்லாம் அரசாங்கம் கையேற்று நடாத்தவேண்டும் என்று வலியுறுத்திய நம் சைவப் பெரியார் கல்வி நிலையங்களில் குழந்தைகளுக்கு வேண்டிய சமய போதனையும் நடத்த வேண்டும் என்பதனையும் அழுத்திக் கூறியுள்ளார். தனியார் மத நிறுவனங்கள் நடாத்துகின்ற பாடசாலைகளிலும் அந்த மதத்தைச்

சாராத பிள்ளைகள் கற்பதனால் ஏற்படுகின்ற கெடுதல்களையும் அவர் சுட்டிக்காட்டத் தவறவில்லை. கல்வி அமைச்சு, கல்வி நிருவாக சபை, கல்வித் திணைக்களம், பாடசாலை, பாடசாலை முகாமையாளர், பாடசாலை ஆசிரியர் எல்லாம் குழந்தைக்குப் பணிபுரியவே அமைந்தன என்பதையும் இவர் வற்புறுத்திக் கூறியுள்ளார். ஒரு மனிதன் தான்விரும்புகின்ற பாடசாலையில் தன்பிள்ளையைச் சேர்ப்பதற்கு உரிமை இருக்க வேண்டும் என்பதைச் சிலர் வாதிடலாம், இந்த வாதம் இனம்-சமூகம் என்ற முறையிற் பொருத்தமற்றது என்பதையும் இவர் சுட்டிக் காட்டியுள்ளார். அரசு தான் பிழை என்று கருதுவதைச் செய்வதற்கு யாரையும் அநுமதித்தலாகாது; இதற்கு எடுத்துக்காட்டாக, அம்மைப்பால் குத்தல், கட்டாய ஆரம்பக் கல்வி ஆதியவற்றை அரசு பெற்றோராகிய குடிமக்களிடம் சுமத்தியுள்ளதைக் கூறலாம் என்றார். கிறீஸ்தவ பாடசாலைகளில் கற்பதனால் ஏற்படக்கூடிய தடுப்புரையின் தன்மையைப் பெற்றோர்கள் இப்போதுள்ள நிலைமையில் உணரமாட்டார்கள் எனவும் இவர் குறிப்பிட்டுள்ளார். ஏனெனில் போத்துக்கேயர் - ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திலும், பின்னர் ஆங்கிலேய கிறித்துவ பாடசாலைகளிலும் கற்ற மக்களின் சமயவுணர்ச்சி பெலவீனப்பட்டுள்ளது என்பதையும் விரித்துள்ளார். மேலும், குறிப்பிட்டவொரு கிறீத்தவக் கல்லூரியில் பெரும்பான்மையான சைவக்குழந்தைகள் கற்றுவந்த குழந்தைகளின் மனம் மாசுபட்டிருந்ததனால் சைவத்திற்கு இன்றியமையாததான திருநீறு அணிதலைத் தாமே கைவிட்டனர் எனக் கூறித் தமது ஆழ்ந்த கல்விக் கருத்தை வெளிப்படுத்தினார்.

ஐந்தாம் வகுப்பில் விவேகப் பரீட்சை நடத்தப்பட வேண்டும் என்ற கருத்தைத் தடுத்துரைத்துள்ளார்.

சைவ உணவு விடுதி இல்லாத பயிற்சிக் கலாசாலையில் சைவ பயிற்சியாளர் தங்கியிருந்து கல்விப்பயிற்சி எடுக்கவேண்டும் என்ற நியதிக்கும் தடுப்புரை வழங்கியுள்ளார்.

விவாகமாகாத ஆசிரியர்களில் அவருக்குக் கீழ் இளைய சகோதர சகோதரிகள் பொறுப்பாயிருந்தால் அத்தகைய ஆசிரியர்களுக்கு மேலதிக வாழ்க்கைச் செலவுப்படி வழங்கவேண்டும் என்ற புரட்சிகரமான கருத்தையும் தெரிவித்துள்ளார்.

கல்விகற்பிக்கும் ஆசிரியர்கள் முழுமையாகக் கற்பிக்கும் நேரத்தில் கற்பித்தலை நேரியமுறையில் செய்யாதிருப்பதால் அவற்றை நிவர்த்திக்கக் கூடிய தலைமையாசிரியர்களை நியமிக்க வேண்டும் என்பதையும் மிக்க தீர்க்கதரிசனத்துடன் கூறியுள்ளார்.

இவ்வாறு நம் சைவப்பெரியார் திரு. சு. சி. அவர்களின் கொள்கைகளிலும் கோட்பாடுகளிலும் சமயத்தில் அரசின் தலையீடு அமையக்கூடாதென்றும், கல்வியில் அரசின் தலையீடு அமையவேண்டும் என்றும் இருப்பதை நாம் இங்கு காட்டிய கருத்துக்களால் அறியலாம். இக்கருத்தெல்லாம் இனநிலையாக - சமுதாய முறையாக எண்ணிய எண்ணத்தின் பேறு என்று நாம் தெளிதல் வேண்டும். சமயம் முழுமையான தனிநிலைக்கே உரிய உரிமைப்பாடு என்பதும், கல்வி முழுமையான இனநிலைக்கே உரிய உரிமைப்பாடு என்பதும் நம் பெரியாரின் முடிந்த சித்தாந்தமாகும். இன்றைய கல்வி உலகியலோடு ஒட்டிய கல்வியாதலின் அரசின் கட்டுப்பாடு வரவேற்கத் தக்கதென்கிறார். இதிலும் உலகியல் ஒட்டிய சைவசமய ஆக்கப்பாடே அவரின் அறிவியலிலும் தொழிற்பட்டதெனலாம். அவர்காலத்தில் வெவ்வேறு மதநிறுவனங்களிலும், தனியார் துறைகளிலும் கல்வி கற்ற பெரும்பான்மையான சைவ மாணவர்கள் சைவசமயக் கல்வி கற்க முடியாமலும், சைவ ஆசாரசீலச் சின்னங்களோடு போக முடியாமலும் இருந்தனர். அந்த இருள் நிலைக்கு விடிவு, அரசினர் எல்லாப் பாடசாலைகளையும் பேறுப்பேற்றுத் தன்னுடைமையாக்குவதே என்றும்; அவ்வாறான அரசினர் பாடசாலைகளில் அச் சைவப் பிள்ளைகளுக்குச் அச்சமய அறிவுப் பாடம் கற்பிக்கப்படல் வேண்டும் என்றும்; அவர் தெளிவாக்கிய திறன் நோக்குக. தாய்மொழி மூலம் கல்வி என்று மொழிச்சுதந்திரம் வற்புறுத்தப்பட்டவாறுபோல்ச் சைவசமயக் கல்வியும் அச்சமயக் குழந்தைகளுக்குப் புகட்டப்படல் வேண்டும் என்று சமயசுதந்திரம் வற்புறுத்தப்பட்ட புதுமையை நம் அறிவு வரவேற்காமல் இருக்க முடியாது. ஒரு கொள்கையோ அல்லது கோட்பாடோ தனிமுறை-இனமுறை முகமாகப் புகுத்தப்படும்போது நேரிய வழியாகப் புகுத்தல் வேண்டும் என்பதே சைவப் பெரியாரின் அடிமனமாகும். ஆனால் எல்லா மனிதர்களின் மனப்பண்பும் அறிவியல் விளக்கமும் ஒருபடித்தாக அமையாததால் நடைமுறையில் அரசின் சட்டத்தலையீடு அமைதல் ஓர் இனத்தின் முழுமையான உரிமைப்பாடுகள் நிறைந்த சுதந்திர அரசினாலேதான் அமைதல் வேண்டும் என்பதே நம் பெரியாரின் பெரிய அவாவாகும் என நாம் தெளிவோமாக.

## நிறைவுரை.

நாவலர் பெருமானின் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் சைவப் பணிபுரிந்த சு. சிவபாதசுந்தரனார், "சந்திரனின் வெளிச்சத்தைக் கைத்துணியால் அணைக்க முடியாதது போன்றதே நாவலர். அவர் மகான்; அவர் மீது குற்றங்களைச் சிறியோர்கள் சுமத்திவர, அதனால்

அவர் மகிமை குறையப் போவதில்லை'' என்று நாவலரைப் பற்றிப் பேசுவர். அவரைப்பற்றியும் ஒருநூல் ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். சைவசமயசாரம் என்னுஞ் சிறுநூல் 1947ஆம் ஆண்டாகியதுன்முகியில் எழுதி வெளியிட்டார்; என்ன வருத்தம் இருந்தாலும் புத்தகம் பார்ப்பதையோ கடவுளைத் தியானிப்பதையோ அவர் கைவிடுவதில்லை. ''பட்டம் பெற்றவுடன் எல்லோரும் புத்தகத்தைக் கைவிடுகிறார்கள். இந்த வயசு வந்தும் புத்தகம் பார்க்கிறேன்'' என்பர். ''சாந்துணையும் கல்லாதவாறு'' என்ற திருவள்ளுவர் கூற்றைக் கடைப்பிடித்தவர். நம் சைவப் பெரியாருக்குச் சங்க இலக்கியத்தில் விருப்பமில்லை. அவை கூறும் காதல் வாழ்வை மனித இலட்சியமாகக் கொள்ளவில்லை. காதல் கசிந்து அன்பாய்க் கனிந்து அருளாய் முதிர்ந்து சிவமாகும் அந்தப் பெருமை நிலையையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டார். இஃது தான் அகப்பொருள் தரும் இலக்கணம் என்ற தொல்காப்பியக் கருத்தைத் தொட்டுப் பார்க்காதது மனவருத்தத்திற்குரிய தொன்றாகும். சைவ நூல்களை மற்றைய நூல்களோடு சேர்த்து வைத்திருக்கமாட்டார்; அவ்வளவு மதிப்பு அந்நூல்களில் அவர்க்குண்டு. யாரும் அந்நூல்களை இரு கையாலும் கொடுத்து வாங்க வேண்டும் என்பர். அவ்வாறு யாரும் செய்யாவிட்டால் அவர்கள்மீது சினப்பார். நாலு முழ வேட்டி கட்டினாலும் மானத்தை இழக்கத் தயாரில்லை என்பார். ''அற்றம் அயலான் கையேறல்'' என்ற திருவள்ளுவர் வாக்கைக் கடைப்பிடிப்பவர். எப்படிப்பட்ட எழிலார் புருடராயினும் அவர்களுடைய உதவியை தன்னலத்திற்காகத் தன் கொள்கைகளை விடமாட்டார். சைவத்தைக் காப்பதுதான் நம் சைவப் பெரியாரின் ஓர் அவாவாகும். சுதந்தர நோக்கில் — விடுதலை விருப்பில் சமய ஒற்றுமையை விடுதலை வீரர் விளம்பினாலும் அவர்கள் கையாண்ட வழியே வருந்தத் தக்கது என்பார். சமயங்கள் கூறும் உண்மைப் பொருள்கள் ஆசாரங்கள் எல்லாம் வேறுபட்டவை. உலகநீதி உரைப்பதில் ஒத்திருக்கலாம். ஆனால் தத்துவஞானம் அளவில் வேறுபட்டவையே. இவற்றை ஒன்றென்று கூறுவது அச்சமயஞானிகளையே நிந்திப்பதாகும். எவ்வாறு ஒவ்வொரு அரசியற்கட்சிகளும் தங்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துக் கழறுவதற்கு உரிமையுண்டோ அவ்வளவு உரிமை சமயத்திற்குமுண்டு. அதனை மழுக்கப் பார்ப்பது சத்தியத்திற்கும் நீதிக்கும் மாறுபட்டதாகும். மக்களிடத்தில் சமயப்பற்று இருப்பதையறிந்து அதனைத் தம் அரசியற் செல்வாக்கிற்காகக் கையாளப் படுத்தாவிட்டால் சமயம் அரசியலில் புகாது; அரசியலும் சமயத்திற்புகாது என்ற விளக்கமுடையவர் ''ஆகம வழிவரும் சைவனையே மதி'' என்று அறைவர். சைவனுக்கு அழகு திருவாசகம் படித்தல். திருவாசகம் படித்தவன் இந்தப் பிறவி எடுத்தது குறித்துக் கவலைப் பட வேண்டியதில்லை. இந்தப் பிறவி எடுத்ததின் பயனைப் பெற்று

விட்டாள்" என்ற இறுக்கமான இனிய கருத்துடையர்; இக்கருத்தோடு நிறைவுரையை நிறைவாக்குகின்றேன்.

"சிவகருமஞ் செய்யார் திருநீறு சாத்தார்
தவநிலையாஞ் சைவநெறி சாரார் - அவனிதனில்
கான்பரந்த பச்சைக் களாநிழலைக் கைதொழார்
ஏன்பிறந்தார் மானிடர் இன்று"

— கருவைவெண்பா

ஆக்கம்: புலவர் நா. சிவபாதசுந்தரனார் அவர்கள்

### சைவப்பெரியார்

# சிவத்திரு. சு. சிவபாதசுந்தரம் அவர்கள் செய்தி வெண்பா.

1. கல்வி அறிவுசெல்வம் காணும் புலோலிநகர்
வல்லிபுர நாதர் வருகுடியில் — மல்கினர்
சுப்பிர மண்யம் குமார சுவாமியுடன்
ஒப்புங் கணபதியும் ஒத்து.

2. வல்லிபுர நாதர் வளமார் செழும்பொருட்கே
சொல்லும் புதுச்சேரி சேர்ந்தக்கால் — மல்லலுறும்
வார்கடைச் சாமியார் வண்ண மனங்கண்டே
நேர்தம் மனைகொண்டார் நேர்ந்து.

3. வாழ்ந்திடும் வார்கடைச் சாமி அருள்நோக்கால்
காழ்த்த கடிமணமாய் வள்ளியம்மை — வாழ்வில்நேர்
சுப்பிர மண்யம் சிவபாத சுந்தரத்தை
இப்புவியிற் பெற்றார் இனிது.

4. தம்புலமைச் சீர்எல்லாம் தாங்கும் ஒழுக்கத்தோ(டு)
எம்மகன் ஏத்துதல் ஏற்றதென்ன — இம்மண்மேல்
பெற்றெடுத்தார் சுப்பிர மண்யப் பெருமகனார்
நற்பேறுஞ் சைவ நலத்து.

5. பிள்ளைச் சிவபாத சுந்தரம் மாமிமுறை
உள்ளுஞ்சீர் பாருத்தைப் பாட்டியிடம் — கொள்ளும்

பருவத்துப் பன்னூற் பகரறிவு பெற்றூர்
உருவானுர் மேற்படிப்பி னுள்

6. செப்பும் செழுந்தந்தை சீரார்தம் தம்பியிடம்
ஒப்பும் உயர்கல்வி ஓதுவிக்கத் — தப்பாமல்
தம்மோ டழைத்துத் திருவனந்தஞ் சார்ந்தாரே
எம்புகழ்ச் சுந்தரத்தை ஏற்று.

7. செல்வத் திருவனந்தஞ் சென்றே மகாராசக்
கல்லூரிக் கல்விகற்றுச் சென்னைநகர் — பல்கலை
நேர்கழகப் பட்டம் தருக்கம் நறுங்கணிதம்
பேர்பெறவே பெற்றூர் பெரிது.

8. சுழிபுரத்தில் செல்லப்பா சொல்நிலையுஞ் சீமான்
அழிவிலாக் கல்லூரி யாக்கம் — பழியிலாப்
பண்பிற் பயிலப் பகர்தலைமை பெற்றுநின்றூர்
எண்சைவப் பேற்றின் எழில்.

9. கல்லூரிக் கல்வி கனிந்த நயத்தாலே
பல்கும் அகநூல், படிப்பித்தல் — பல்விதியும்
ஒண்முறையும் ஒன்ருக ஓதும்நூல் தந்தாரே
நண்புறுங் கல்வி நலத்து.

10. உளநூற் புலமை உறுதருக்க வன்மை
அளவிற் கணிதத்தில் ஆற்றல் — உளவியல்பால்
சித்தாந்த சாத்திரஞ்சொல் சைவச் செழுமையில்
உத்தம சீலஞுனர் உற்று.

11. சைவத்தின் சால்பிலே சார்ந்த மிருகபலி
கைவந்த சீராகச் செய்பவர் — நைவரென்று
முன்னின்று சொன்ஞர் முயங்கும் இதுபோன்ற
நன்முறைகள் நாடுவர் நன்கு.

12. தன்னரசர் இல்லாதால் தக்கநம் சைவத்தில்
உன்னு மவர்புகுதல் ஊனமென்ற — மன்னிய
எண்ணத்தில் வன்மையாய் வாதிட்டார் எம்இந்து
கண்ணிய ஆணைக் களத்து.

13. சங்கநிலை, சால்பில் தனிநிலைப் பள்ளியெலாம்
தங்கும் அரசே தமதாக்கிப் — பங்கமில்

இந்துமதக் கல்வி இலவசக் கல்வியெல்லாம்
தந்துவழி செய்தார் தனித்து.

14. அறுபத்து மூவர் அடியவர்கள் பூசை
மறுவில் சிவசீலம் மாட்சி — உறுமுறையாய்ச்
செய்ய முனைந்தீர் செழுஞ்சைவப் பண்பினர்
உய்யும் முறையிஃதென் றே.

15. ஆங்கிலம் செந்தமிழ் ஆய மொழிகளிலே
தாங்குஞ் சிவசீலத் தத்துவத்தைப் — பாங்காய்
உலகம் உணர்ந்துய்ய உற்றவுரை ஊற்றம்
தலமெங்கும் தாங்கல் தனி.

16. பேறான வேதாந்தம் பெற்ற பெருமைபோல்
மாறான சித்தாந்தம் மன்னவே — ஏறாய்
எழுதிய சீர்நூல்கள் ஏத்திநிலை நிற்க
வழுத்தல் நமக்குற்ற வாழ்வு.

17. சாந்துணையுங் கற்றார் தகைசால் சிவநூலைக்
காந்தம் இரும்புபோல் கண்ணுறுவர் — ஏந்திவரும்
தம்நலத்திற் தம்கொள்கை தாழ்ந்து பறிபோக
எம்முறையில் ஏற்கார் எடுத்து.

18. சிவகருமம் செய்வீர் சிவநீறு சாத்திப்
பவமறுக்கும் பாதை பகர்வீர் — நவமாய்ச்
சைவநெறி சாற்றிச் சகம்முழுதும் சால்பாகக்
கையுறவே காண்பீர் கடிது.

**ஆக்கம்: புலவர் நா. சிவபாதசுந்தரனார் அவர்கள்**